கடவுள் துணை!

# செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சஅ.] கர-பங்குனிமீ—நந்தன-சித்திரைமீ [பகுதி ரு-சா.

Vol. 48. March—May 1952 No. 5-6.

உள்ளுறை.

இராமாவதாரம்:—பத்திராசிரியர் கஉசா—கஉகூ

செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்ததிருப்பதிகள்:— திரு. T. V. சதாசிவபண்டாரத்தார் அவர்கள் கஙo—கஙசா

செம்மையின் ஆணி:—திரு. E. S. வரதராஜஐயர் அவர்கள் கஙஎ—கசஅ

உள்ளமும் கல்வியும்:—திரு. R. C. S. ஐயர் அவர்கள் கசகூ—கருஅ

மதிப்புரை:—பத்திராசிரியர் கருகூ—கசா0

பத்திராசிரியர்—திரு. நா. அப்பணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1952

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. N. Appan Iyengar at the Tamil Sangam Power Press, No. 54 Tamil Sangam Road, Madura.

உ

# ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,
மானேஜர்.

கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி–௪௮.] கர-பங்குனிமீ—நந்தன-சித்திரைமீ [பகுதி ௫-௬.
Vol. 48. March—May 1952 No. 5-6.

## இராமாவதாரம்.

இராமாவதாரமென்பது கம்பநாட்டாழ்வார் தாமியற்றிய மாப்பெருங்காப்பியத்துக்கு வழங்கிய பண்டைப் பெரும்பெயர். கற்றோர் பலரும் இதனை நன்கு அறிவர். ஆயினும் அஃது இக்காலத்துப் பெருவழக்காதலின்றி அருகிவிட்டது. அப்பெயரமைப்பிற் காவியப்புலவர் கருதின, உட்கிடையான சிறந்த பொருளுண்டு. அவ்வுண்மையைப் புலப்படுத்தி அப்பெயர்வழக்கை மீண்டும் புதுப்பிப்பது கருதிற்று இக்கட்டுரை என்பது.

இராமாயணம் என இக்காலத்து மறுபெயர் வழங்கும் அந்நூலுக்கு இராமாவதாரம் என்பதே பழம்பெயர் என்ற மெய்ம்மையை முதன்முதலாக அரிதின் ஆராய்ந்து வெளியிட்டபெருமை, அப்பொழுது செந்தமிழ்ப் பத்திராசிரியராய் விளங்கின, சேது ஸமஸ்தான மஹாவித்வான் ஸ்ரீ ரா. இராகவையங்காரவர்களுக்குரியதாம். இற்றைக்கு ஏறத்தாழ ஐம்பதாண்டுகட்கு முன்னரே இப்பத்திரிகையின் முதற்றொகுதி, பக்கம் 136-ல் 'ஆராய்ச்சி' என்ற தலைப்பின்கீழ் அவர்கள் இதனை எழுதியுள்ளார்கள்.

அப்புத்தகம் பலர்க்கும் இக்காலத்துக் கிடைப்பதரிது. ஆகையால் அவர்கள் பொன்மொழிகளைப் போற்றி மீண்டும் இங்கே தந்துரைத்தல் மிகையாகாது.

"கவிச்சக்கரவர்த்தியாகிய கம்பநாடர் தாம் ஸ்ரீராமகதையினைச் செந்தமிழ்த் தொடர்நிலைச் செய்யுளாக அமைத்தகாலத்து 'இந்நூல் இவ்வாறுவழங்குக' என இட்டபெயர் இராமாயணம் என்னும் முதனூற்பெயர் அன்று; மேற்குறித்த இராமாவதாரம் என்பதேயாகும். என்னை?

> "நடையி னின்றுயர் நாயகன் றோற்றத்தின்
> இடை நிகழ்ந்த இராமாவ தாரப்பேர்த்
> தொடை நிரம்பிய தோமறு மாக்கதை
> சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே."

என அவர்தாமே அந்நூற்கு அவ்வாறு பெயர்வழங்குதலான் என்க. நம் மதுரைத் தமிழ்ச்சங்கத்துக்குக் கிடைத்த பழைய பாலகாண்டப் பிரதியொன்றில்,

> 'இத்த லத்தினு மிராமாவ தாரமே
> பத்தி செய்து பரிவுடன் கேட்பவர்
> புத்தி மிக்கரும் புண்ணிய முந்தரும்
> எத்த லத்து மவனடி யெய்துவார்'

என்னுஞ் செய்யுளொன்று உள்ளது. அதனாலும் கம்பர் இயற்றிய தொடர்நிலைச்செய்யுட்கு வழங்கிவந்த பெயர் இராமாவதாரமே என்பது நன்று தெளியப்படும்.

தாமிட்ட அவ்விராமாவதாரப் பெயர், இராமபிரானது பிறப்பொன்றே விரிக்கும் நூல் என்னும் பொருள்படவும் நிற்றலான், அங்ஙனம் கொண்டு உலகம் மயங்காமைப் பொருட்டுத் திருமாலினது தசாவதாரங்களுள் ஒன்றாகிய இராமாவதாரத்து நிகழ்ந்த சரிதம்முழுதும் உணர்த்தும்நூல் என்பதே பொருளென்பார், 'நாயகன் றோற்றத்தி னிடைநிகழ்ந்த விராமாவ தாரப்பேர் ... மாக்கதை' என்றார். இவ்வாறு ஒரு பெயர்வழக்குண்மை அறியாது சிலர் 'இராமாவதாரப் பேர் ... ... மாக்கதை' என்பதற்கு 'இராமாவதாரத்தைக் குறித்த பிரசித்தமான கவித்தொடை நிறைந்த குற்றமற்ற பெருமைபொருந்திய சரிதம்' எனப் பொருள்கூறிப்போந்தார்.

அற்றேல், அப்பெயர் கம்பநாடர்காலத்தன்றி அவர் காலத்துக்குப் பின்னரும் வழங்கப்பட்டுவந்த தென்பதற்கு மேற்கோள்

உண்டோ எனின்? உண்டு. தான் எடுத்துக்காட்டும் பாடல்களின் தலைப்பில் அவ்வந்நூற்பெயரை எழுதிவிளக்குவதும், பல அதிகார வடைவுகளையுடையதுமாகிய 'புறத்திரட்டு' என்னுந் தொகைநூலி லும் கம்பர் இயற்றிய தொடர்நிலைச்செய்யுளினின்றும் பல பாடல் கள் எடுத்தாளப்பட்டுள்ளன. அங்ஙனம் அவையுள்ள இடங்களி லெல்லாம் இராமாயணம் என வேறுபெயராற் குறிக்கப்படாது, இராமாவதாரம் என்றே எழுதப்பட்டுள்ளது. அதனாற் புறத்திரட் டுத்தொகுத்தார் காலத்து அப்பெயரே வழங்கிவந்தமை நன்கு விளங்கும்"

இங்ஙனம் தந்துரைத்த பெரியார் வாக்கினால் உண்மையுணர்ந்த பிறகு, அறிஞர் சிலர் கம்பராமாயணத்தை இராமாவதாரம் என் னும் பெயர்கொண்டு வழங்கத்தொடங்கினர். 'இராமாவதாரச் செய்யுட்பாடாந்தரம்' என இச்செந்தமிழில் முன்பு வெளிவந்த கட்டுரைத்தொடராலும் பிறவற்றாலும் இதனை அறியலாம். ஆயினும் கம்பராமாயணம் என்றபெயரே வழக்குவலியுடையதாய் இன்றுகாறும் எஞ்சிநிற்பதாயிற்று.

இப்பால், பழைமையும் பெருமையும் வாய்ந்த புறத்திரட்டு என்னும்நூல் அச்சாகி வெளிவந்துளது. அது, அப்பொழுது சென்னைச் சருவகலாசாலைத் தமிழாராய்ச்சித்துறைத் தலைவரா யிருந்த திரு, S. வையாபுரிப்பிள்ளையவர்களாற் பரிசோதிக்கப் பெற்றது. அப்பரிசோதகர் தம் நுண்ணிய ஆராய்ச்சித்திறம் விளங்க அதற்கொரு நூன்முகம் வரைந்து உதவியுள்ளார்கள். அந்நூன்முகத்தில் இவ்விராமாவதாரத்தைப்பற்றிய குறிப்புப் பின் வருமாறுள்ளது.

"கம்பராமாயணம் என்ற பிரஸித்த காவியம் இராமாவதாரம் என்ற பெயரால் வழங்கிவந்தமை இக்காலத்தில் யாவரும் அறிவர். ஆனால் புறத்திரட்டின் மூலமாகத்தான் இவ்வுண்மை முதன்முத லில் வெளியிடப்பட்டது. இதன்பின்னரே 'இராமாவதாரப் பேர்த் தொடைநிரம்பிய தோமறு மாக்கதை' என்று கம்பர் அருளிய வாக் கின் பொருள் நன்குவிளங்குவதாயிற்று. புறத்திரட்டுச் சுருக்கங்

களில் இராமகாதை என்றபெயர் காணப்படுதலினால் இப்பெயரா னும் பிற்காலத்து இப்பெருங்காப்பியம் வழங்கப்பெற்றதாதல் வேண்டும். இவ்விரண்டுபெயரும் இக்காலத்து வழக்கொழிந்து விட்டன. முதனூலாசிரியர்இட்ட இராமாயணம் என்ற பெயரே கம்பரது அரும்பெருநூலுக்கும் பெயராக இப்பொழுது வழங்கு கின்றது. கம்பர் இட்டபெயரை நாம் தெரிந்துகொள்ளுதற்குக் கருவியாய் முடிந்தது புறத்திரட்டேயாகும். [அடிக்குறிப்பு:— காஷ்மீரிமொழியில் 'ராமாவதாரம்' என்ற பெயரினால் இராமசரிதம் வழங்கப்படுவது ஈண்டு அறிந்து இன்புறத்தக்கது.]"

இவ்வாராய்ச்சிக்குறிப்புக் கம்பநாட்டாழ்வார் தம் காப்பியத் துக்குத் தாம் சூட்டிவழங்கிய திருப்பெயர் இராமாவதாரம் என் பதே என மலையிலக்காக நிலைநிறுத்துகின்றது. இனி அப் பெயர் வழக்கின்கண் ஆசிரியர்குறிக்கோளாகி அடங்கிக்கிடந்த பெறலரும் பொருளயம் என்னையென்பது ஆராயப்படும்.

முதனூலான வான்மீகிராமாயணத்துக்கும் அதனைப்பெரிதும் அடியொற்றிச்செல்லும் கம்பராமாயணத்துக்கும் இடையே வேற் றுமைகள் இல்லாமலில்லை. இரண்டனையும் கூர்ந்து ஒப்புநோக்குவார்க்கு அவை பலவாதல் தெளிவாய் விளங்கும். அவ் வேறுபாடுகள் எல்லாவற்றினும் சிறந்து வெள்ளிடைமலையென விளங்கி முதன்மை யானதொன்று இங்கு மிகவும்போற்றிக் குறிக்கொள்ளத்தக்கது.

வான்மீகிமுனிவர் தம் நாயகனான இராமபிரானிடம் கடவுட் டன்மை கீழ்ப்பட மானிடத்தன்மையே மேற்படுமாறு இதிகா சத்தை இயற்றிச்சென்றார். "ஆத்மாநம் மாநுஷம் மந்யே" என்பது அவர் திருவாக்கு என்ப. கம்பநாட்டாழ்வார் அவ்வாறன்றி, தம் நாயகனான இராமபிரானிடம் மானிடத்தன்மை கீழ்ப்பட்டு மறைந்து நிற்ப, கடவுட்டன்மையே மிகமிகமேற்பட்டு விஞ்சித் தோன்றுமாறு காப்பியம்புனைந்து முற்றுவித்தார்.

எனவே 'சிலையினா லிலங்கைசெற்ற தேவ' னான இராமபிரான் இவ் விருவேறு ஞானியர்க்கும் அவரவர் அகக்கண்முன்னே காட்சி யளித்துக் காப்பியம்புனைவித்துக்கொண்டது, இங்ஙனம் இருவேறு

அடிப்படைக் காரணங்களுடையது. இவ்வுண்மையே இங்கு மிகவும் போற்றிக் குறிக்கொள்ளத்தக்கதாம்.

இவ்வாறு திருமாலவதாரத்தின் மெய்யநுபவம் கம்பருக்குக் கைவந்த காரணத்தாலே, 'கம்பநாட்டாழ்வார்' என அவர் ஆன்றோர் பாராட்டுப் பெறுவாராயினர். தெய்வபத்தியில் ஆழ்ந்து திளைத்த அநுபவமுடைய பெரியார்களே ஆழ்வார் என்றல் பண்டையோர் மரபு.

'இராவணன்மேல், அம்புநாட்டாழ்வா னடிபணியு மாதித்தன், கம்பநாட் டாழ்வான்' எனவும் 'தெய்வப்புலமைக் கம்பநாட், டாழ் வார்பதத்தைச் சிந்திப்பவர்க் கியாது மரியதன்றே' எனவும் வழங் கும் தனிப்பாடற்பகுதிகள் இதற்குச் சான்றுபகர்கின்றன.

அன்றியும், 'கம்பராம் புலவரைக் கருத்திருத்துவாம்' என்றும் 'கம்பநாடன் கழல்தலையிற் கொள்வாம்' என்றும், 'மாதவன் கம்பன் செம்பொன் மலரடி தொழுது வாழ்வாம்' என்றும் புலவர்கள் புகழ்ந்து போற்றியதெல்லாம் கம்பருக்கு எய்திய கடவுட்பேறு கருதியல்லது பிறிதன்று.

இவையாவும் இராமாவதார நூலின் சிறப்புப்பாயிரத் தனியன் களாக அன்றுமுத லின்றுவரை ஆன்றோராட்சிபெற்று நடப்பன. ஆகலின் அவை வெற்றுரைகளென விலக்கத்தகுவன அல்ல. இது நிற்க.

அவதார மெய்ப்பொருளுணர்த்தலாகிய அடிப்படையிலேயே கம்பர் காப்பியமியற்றினரென்பது முன்னரே கூறிப்போந்ததாம். இனி இவ்வுண்மை இராமாவதார நூலின்கண் எவ்வளவாக விவரிக் கப்பட்டுள்ளதென்பது ஒருசிறிது ஆராயத்தகும். அது முற்றச் சொல்லி முடிவுபோகாதன்றே?

வான்மீகத்திலில்லாத இரணியன்வதைப்படலத்தைக் கம்பர் தம் காப்பியத்துப் புதுவதாகப் புனைந்துரைத்தது உலகறிந்த உண்மை. இருநூல்களிடையும் காணப்படும் மாறுபாடில்லாத வேறுபாடுகள் பலவற்றுள்ளும் இது முதன்மைவாய்ந்தது. கம்பர்

இவ்வேறுபாடுகொண்ட கருத்து, திருமாலவதாரமே இராமபிரான் என்ற மெய்ப்பொருள் வற்புறுத்தலன்றிப் பிறிதன்றும்.

இன்னும் திருவவதாரப்படலம், பரசுராமப்படலம், சரபங்கர் பிறப்புநீங்குபடலம், வருணனைவழிவேண்டுபடலம், நாகபாசப்படலம் முதலியவிடங்களிலும் இவ்வுண்மை வெளிப்பட்டு நிற்கும். அன்றியும் வசிட்டர், பரத்துவாசர், அகத்தியர், கவந்தன், விராதன், வாலி, கும்பகருணன், இந்திரசித்தன், வீடணன் முதலானோர் வாய்மொழிகளும் தெள்ளத்தெளிய இராமனுடைய பரத்துவநிலையை விரித்துரைப்பனவாய் விளங்குகின்றன.

அவ் விராமாவதாரப் பாடற்பகுதிகள் பயில்வோரைப் பேரின்பவெள்ளத்து மூழ்குவிக்க வல்லன. அவற்றில் இரண்டனை மட்டும் இங்கு எடுத்துக்காட்டுவேன்.

கங்கைக்கரையிற் றபோதனர்பெற்ற பேரின்ப அநுபவத்தைக் கம்பர் கட்டுரைக்கும் கற்பனை இது:—

'பெண்ணி னேக்குஞ் சுவையிற் பிறர்பிறர்க்
கெண்ணி நோக்கி யியம்பரு மின்பத்தைப்
பண்ணி னேக்கும் பராவமு தைப்பசுங்
கண்ணி னேக்கின ருள்ளங் களிக்கின்றார்' (கங்கை, 11)

'இரைத்தமறை நாவினெ டியைந்தபிற யாவும்
நிரைத்தநெடு ஞானமிமிர் கல்லின்நெடு நாளிட்
டரைத்தும் அயனுலும்அறி யாதபொருள் நேர்நின்
றுரைக்குதவு மால்எனும் உணர்ச்சியின் உவப்பான்' (அகத். 43)

அகத்தியமுனிவருக்குவாய்த்த பெறலரும்பேரின்பவருணனை இது.

இங்ஙனமாக அங்கும் இங்கும், விண்ணுலகத்தும் மண்ணுலகத்தும், காட்சியளிக்கும் திருமாலின் அருமையும் எளிமையுமான, பரத்வ ஸௌலப்ய, நிலைகள் இரண்டனையும் ஒன்றுசேர்த்து, கவிக் கூற்றாகக் கம்பர் ஈடுபட்ட பக்திப்பெரும்பாடல்கள் எத்துணையோ பலவுள. அவை யாவும் இராமாவதாரப் பெருங்காப்பியத்தின் உயிர்நாடி யென்னலாம். ஆழ்ந்த கருத்தமைதிகொண்டு ஆசிரியர்

வழங்கின 'இராமாவதாரம்' என்னுங் குறியீட்டின் அரும்பொருள் நயத்தை அள்ளித்தெளிக்கும் பேருரைகளாகவும் அப்பாடல்களைக் கொள்ளல் தகும்.

'சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்'

'கொல்லாழி நீத்தங்கொர் குனிவயிரச் சிலைதடக்கை கொண்ட கொண்டல்'

'தொல்லாழி துயிலாதே தயாழி நெடுங்கடலுட் டுயில்கின்றானே'

'கருங்கடற் பள்ளியுட் கலவி நீங்கிப்போய்ப் பிரிந்தவர்'

'அராவணை துறந்துபோந் தயோத்தி யெய்திய விராகவன்'

'அண்டசத் தருந்துயில் துறந்த வையன்'

'அரக்கரைக் கடக்கவாழித் துயில்கடந் தயோத்தி வந்தான்'

என்பன ஒருசில அவற்றிற்கு எடுத்துக்காட்டு.

இங்ஙனம் வாச்சியப்பொருளான இராமன் பெருமையைப் போலவே, வாசகமான இராமநாமத்தின் தெய்வப்பெருமையையும் மெய்ப்பித்துக்காட்டும் இடங்கள் மிகப்பலவுள. அத்தகைய அரிய பாடற்றொகுதிகளை யெல்லாம் தனியே வேறிடத்தில் விரிவாக விளக்குதல் வேண்டற்பாலதாகும்.

அங்ஙனமாயின் அவ்வவதார மெய்ப்பொருளை ஓரோவிடத் தன்றிப் பன்னிப்பன்னிப் பலகாற்பாடுவதென்னை? அது கூறியது கூறலாய் வழுவாதோ? எனின், வழுவாது; 'பித்தர் சொன்னவும் பேதையர் சொன்னவும் பத்தர் சொன்னவும் பன்னப் பெறுபவோ?' என அவர் தாமே பாயிரத்துக்கண் அதற்கு வழுவமைதி ஆக்கிக் கொண்டாராகலின் என்பது. அன்றியும் தண்ணீர் வேட்டுத் தாக முற்றானொருவன் அதனைப் பலகால் அள்ளிப் பருகுதல் குற்றமாகாத வாறுபோல இதுவும் குற்றமாகா தென்க.

இன்னும் இதற்கு வேறுவகையால் அமைவுகாணுதல் இங்கு மிகப் பொருத்தமுடையதாம். 'சொற்பொருள் விரித்தல்' எனவும் 'தன்குறிவழக்கம் மிகவெடுத்துரைத்தல்' எனவும் தந்திரவுத்தி கள் வழங்குவதுண்டு. ஒரு நூலின்கண் அதன் ஆசிரியர் தம் குறியீ

டான யாதானுமோர் சொல்லினிடத்துச் சிறந்தபொருளைப் பொதிந்துவைத்தல் மரபு. அப் புதைபொருள் நன்குபுலப்பட விரிப்பான்வேண்டி அவர் கையாளும் யுக்திகள் இவ்விரண்டும் என்பர். இங்ஙனம் நன்மரபாகக்கொண்ட இம்முறைகள் பெருங் காப்பியப் புணர்ப்புக்கும் ஏற்றபெற்றி உதவுவனவாகக் கொள்ளல் இழுக்காது. ஆகவே, கம்பநாட்டாழ்வாரும் தம் குறியீடான இராமாவதாரம் என்பதன் பொருள்விரித்தலாக, அவ்வவதாரத் தின் பாத்வஸௌலப்ய குணாதிசயங்களைப் பலபடப்புனைந்து பாராட்டிய பாடல்களால், மிகஎடுத்துரைத்தமை தகவுடைத்தா யிற்று என்க.

காப்பியப்புலவர் தம் கருத்தமைதியை இவ்வாறெல்லாம் விரித்துரைத்து வெளிப்படுத்திய பின்னரும், இராமாவதாரப் பெயரின் அருமை பொதுமக்களின் புந்தியிற் புகுதாமலொழிந்தது விந்தையினும் விந்தையே! தாயிட்ட பெயரை ஊரிட்டழைக்கும் என்பர். அவ்வழக்கு இராமாவதாரத்திற்கு மட்டும் ஏலாதது என்னையோ?

இனியேனும் இக்குறையாடு நீங்கல் இன்றியமையாது. இராமாவதாரப் பெயரிற் பொதிந்துகிடக்கும் பொருட்செல்வம் போற்றிப் புரந்தாற்குரியது. அப்பெயர்வழக்கினை அழியாமற் புதுப் பித்துப் பாதுகாத்தல் தலைசிறந்த தமிழிலக்கியத் திருப்பணியாகும். அதனைப் புறக்கணித் தொதுக்குதல் புலமையறம் ஆகாது.

ஆயினும் இக்காலத் தொருசிலர் இராமன் சிறுமானிடனே யென்றும், அவனைக் கம்பர் திருமாலாகக் கூறியதெல்லாம் அரசனைத் திருமாலோடு உவமித்துச்சொல்லும் ஒருவகை மரபுபற்றிய தல்லது பிறிதில்லையென்றும், இவ் வவதாரவுண்மையை எளிதாக அழித்துரைக்கத் தலைப்படுவர். அவர் கூற்றுத் 'தாய்மலடி' என்பது போலாம். 'இராமன்கதை நளன்கதை' என்றெடுத்து இகழ்ந் தாரும் உளரால் எனின்; அன்னபிறரும் அவமதி கொள்ளாமைப் பொருட்டே இத்துணையும் எழுதிப்போந்த தென்க. இன்னுஞ் சொல்லுவேன்.

வைணவரேமட்டுமன்றி, சைவரும் சைனரும் ஆதிய பிறசமயச் சான்றோருங்கூட இவ்வுண்மையில் ஓரஞ்சாராது உடன்பாடுகொன் கின்றனர். சைவத்திருமறையாகிய தேவாரத்துத் திருநாவுக்கரசு நாயனாருளிய திருவிராமேச்சுரத் திருப்பதிகத்தில்,

'கோடிமா தவங்கள்செய்து குன்றினர் தம்மையெல்லாம்
வீடவே சக்கரத்தா லெறிந்துபின் னன்புகொண்டு
தேடிமால் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தை
நாடிவாழ் நெஞ்சமேநீ நன்னெறி யாகுமன்றே.'

'வன்கண்ணர் வாளரக்கர் வாழ்வினை யொன்றறியார்
புன்கண்ண ராகிநின்று போர்கள்செய் தாரைமாட்டிச்
செங்கண்மால் செய்தகோயில் திருவிரா மேச்சுரத்தைத்
தங்கணு லெய்தவல்லார் தாழ்வராந் தலைவன்பாலே.'

என இராமனைச் சக்கரப்படையுடைய செங்கண்மாலாகவே குறிப் பிடுதல் காணலாம். சிலப்பதிகாரவூர்காண்காதையும், 'தாதை யேவலின் மாதுடன்போகிக், காதலிநீங்கக் கடுந்துயருழந்தோன், வேதமுதல்வற் பயந்தோனென்பது, நீயறிந்திலையோ நெடுமொழி யன்றோ' என இராமன் கடவுளேயாதல் வலியுறுத்திச் செல்லா நின்றது. பிறவும் இங்ஙனமாய சான்றுகள் பெரிதுள. அவையெல் லாம் இங்கு விரிவஞ்சி விடலாயின. ஆகவே ஆசிரியர் குறிக்கோளை நன்குமதித்து, இராமாவதாரமென்னும் அருமைத் திருப்பெயர் பழவழக்காயழியாமற் புத்துயிரளித்து வாழ்விக்க, புலமைமிக்க புரையோரை மீண்டுமொருகால் வேண்டிக்கொள்கிறேன்.

திரு, நா. அப்பனையங்கார்,
பத்திராசிரியர்.

# செருத்துணையாரும் புகழ்த்துணையாரும் அவதரித்த திருப்பதிகள்.

[திரு, T. V. சதாசிவபண்டாரத்தாரவர்கள், அண்ணாமலைபல்கலைக்கழகம்.]

## I

அறுபான்மும்மை நாயன்மார்களுள் செருத்துணையார் என்பவர் ஒருவர். இப்பெரியார் தஞ்சாவூரில் அவதரித்து, திருவாரூர் என்னும் திருப்பதியையடைந்து சிவபத்தியும் அடியார்பத்தியும் மிக்குடையவராய்த் திருத்தொண்டு செய்துவந்தனர். அந்நாளில், திருக்கோயில்வழிபாட்டிற்கு அங்குவந்த பல்லவர்கோமானாகிய கழற்சிங்கருடைய மனைவியார் பூமண்டபத்தின்பக்கத்திற்கிடந்த ஒருபூவை எடுத்து மோந்துபார்க்க அச்செயலைப்பொறாத செருத்துணையார் அவ்வம்மையாரின் மூக்கையறுத்தனர். அஞ்சாநெஞ்சம் படைத்த இவ்வடிகள் ஆரூரிறைவற்கு மலர்மாலைதொடுக்கும் தொண்டினைப் பன்னாள் புரிந்து இறுதியில் அப்பெருமானது திருவடிநீழலை படைந்தனர். இவ்வடியாரது வரலாற்றைத் திருத்தொண்டர்புராணம் எனப்படும் பெரியபுராணத்தில் காணலாம்.

இவ்வடிகள்பிறந்த திருப்பதி தஞ்சாவூர் என்பது 'தஞ்சை மன்னவனாஞ் செருத்துணைதன் னடியார்க்குமடியேன்' என்னும் சுந்தரமூர்த்திசுவாமிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றது. தஞ்சாவூர் என்ற பெயருடைய மூன்று ஊர்கள் நம் தமிழகத்தில் உள்ளன. பாண்டிமண்டலத்தில் தென்காசிக்கருகில் ஒரு தஞ்சாவூர் உளது என்பது தென்காசிக்கோயிலிலுள்ள ஒரு கல்வெட்டால் புலப்படுகின்றது.[1] சோழமண்டலத்தில் அப்பெயர்வாய்ந்த இரண்டு ஊர்கள் இருக்கின்றன. எனவே இம்மூன்றனுள் செருத்துணையாரது திருப்பதி யாது? என்பது ஆராய்தற்குரியதாகும்.

---

[1] Travancore Archaeological Series Vol. I. pages 92 and 101.

நம்பியாண்டார்நம்பியருளிய திருத்தொண்டர் திருவந்தாதியி லுள்ள ஒருபாடலும், சேக்கிழாரடிகளது பெரியபுராணத்தில் செருத்துணைநாயனார் புராணத்திலுள்ள ஒருபாடலும் இவ்வடிகள் பிறந்தருளிய திருப்பதி எந்நாட்டில் உளது என்பதை நன்கு விளக்குகின்றன.

அவை,

'கழிநீள் கடல்கஞ் சயின்றார்க் கிருந்த கடிமலரை
மொழிநீள் புகழ்க்கழற் சிங்கன்றன் றேவிமுன் மோத்தலுமே
எழில்நீள் குமிழ்மலர் மூக்கரிந் தானென் றியம்புவரால்
செழுநீர் மருகனன் னாட்டமர் தஞ்சைச் செருத்துணையே.'

(திருத்தொண்டர்திருவந்தாதி-பா. 66.)

'உள்ளும் புறம்புங் குலமரபி னொழுக்கம் வழுவா வொருமைநெறி
கொள்ளு மியல்பிற் குடிமுதலோர் மலிந்த செல்வக் குலப்பதியாந்
தெள்ளுந் திரைகண் மதகுதொறுஞ் சேலுங் கயலுஞ் செழுமணியுந்
தள்ளும் பொன்னி நீர்நாட்டு மருக னாட்டுத் தஞ்சாவூர்'

(பெரியபுராணம்-செருத்துணைநாயனார்புராணம்-பா-1.)

என்பன. இவற்றால் செருத்துணையாரது திருப்பதி சோழமண்டலத்திலுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூர் என்பது வெளியாதல் காண்க.

இனி, சோழமண்டலத்தில் தஞ்சாவூர் என்று வழங்கப்பெற்று வரும் இரண்டு ஊர்களுள் ஒன்று விசயாலயன், முதற்பராந்தகன், முதல்இராசராசன் முதலான சோழமன்னர்கள் வீற்றிருந்து செங்கோலோச்சிய திருவுடை நகரமாகும். இம்மாநகர் தஞ்சாவூர்க் கூற்றத்திலுள்ளது என்பது, 'பாண்டியகுலாசனிவளநாட்டுத் தஞ்சாவூர்க்கூற்றத்துத் தஞ்சாவூர் நாம் எடுப்பிச்ச திருக்கற்றளி ஸ்ரீஇராஜராஜேசுவரமுடையார்க்கு நாம் கொடுத்தன............'[1] என்னுந் தஞ்சைப் பெரியகோயிற் கல்வெட்டால் புலப்படுகின்றது. ஆகவே, தஞ்சாவூர்க்கூற்றத்திலுள்ள இத் தஞ்சாவூர் செருத்துணை நாயனாரது திருப்பதியன்று என்பது திண்ணம்.

---

[1] South Indian Inscriptions Vol. II Ins. No. 1.

சோழமண்டலத்தில் க்ஷத்திரியசிகாமணிவளநாட்டின் உள் நாடுகளுள் ஒன்றாகிய மருகல்நாட்டில் ஒரு தஞ்சாவூர் உளது என்பது, 'க்ஷத்திரியசிகாமணிவளநாட்டு மருகல்நாட்டு மருகல் சபையார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்.........இந்நாட்டு வைப்பூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும் இந்நாட்டு தஞ்சாவூர் ஊரார் இடக்கடவ திருமெய்காப்பு ஒன்றும்' என்ற கல்வெட்டினால் தெரிகின்றது. (South Indian Inscriptions Vol. II. Ins. No. 70.) இச்செய்தி மற்றொரு கல்வெட்டினாலும் உறுதி எய்துகின்றது. அது '(1) திருவாய்க்கேள்வி முன்னாக திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவற்கு யாண்டு ௨-ஆவது ஆடிமாசம் செவரன்மேடான அகரநகரீசுவரச் சதுர்வேதிமங்கலத்து ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலிற் செம்பாதி காணியுடைய (2) சிவப்பிராமணன் காசிபன் இருஷபதேவபட்டனேனும் இந்த ஸ்ரீமூலஸ்தானமுடையார் கோயிலில் மற்றைச் செம்பாதி காணியுமுடைய இக்குடி மகாதேவபட்டனுள்ளிட்ட அனைவோரும் சோழமண்டலத்து மருகல்நாட்டு தஞ்சாவூர் தஞ்சாவூர்கிழவன் உலகளந்தா (3) ன் அகமுடையாள் உய்யக்கொண்டாள் பக்கற் காணி ஒகரியிலே நாங்கள்கொண்ட பழங்காசு ரு இக்காசு மூன்றுக்கும் பலிசை நிசதிச்செலவாக இத்தேவர்க்கு அந்தியம்போது ஏற்றி இச்சந்தியிற் பேரமுதுசெய்த இத்தனையுஞ்செல்ல நாங்களும் எங்கள் சந்தானத்தாரும் சந்திராதித்தவல... ... ...(4) இதல் ஒருசந்தி விளக்கு எரிக்கக்கடவோமாகச் சிலாலேகைபண்ணிக்கொடுத்தோம் இவ்வனைவோம் இவர்கள் பணிக்க எழுதினேன் இவ்வூர்க்கரணத்தான் சிவதாசன் ஆட்கொண்டானான நூற்றநாற்பத்தெண்மனேன் இவையென்எழுத்து இப்படிக்கு இவை இருஷபதேவபட்டன் எழுத்து இப்படிக்கு இவை மகாதேவபட்டன் எழுத்து'—என்பதாம். ( S. I. I. Vol. VII Ins. No. 44 ) எனவே, நம்பியாண்டார்நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூர் இவ்விரு கல்வெட்டுக்களிலும் குறிக்கப்பெற்றுள்ள தஞ்சாவூரேயாதல்வேண்டும் என்பது ஒருதலை.

இந்நாளில் நம் மாகாணத்திலுள்ள தாலூகாக்கள்போலச் சோழ மண்டலத்தில் பல உள்நாடுகள் முற்காலத்தில் இருந்துள்ளன. அவற்றுள் மருகல்நாடு என்பதும் ஒன்றாகும். இது திருமருகலைச் சூழ்ந்துள்ளநாடு என்பது இதன்பெயரால் அறியப்படுகின்றது. இந்நாடு மிகவும் தொன்மைவாய்ந்ததொன்றாம். ஆளுடையநம்பிகளும் தமது திருநாட்டுத்தொகையில் 'மருகல்நாட்டு மருகலே' என்று இம் மருகல்நாட்டைக் குறித்திருப்பது அறியத்தக்கது, திருமருகல்,[1] வைப்பூர், பூதனூர், இடையாற்றுக்குடி, தஞ்சாவூர் முதலான ஊர்கள் இந்நாட்டில் உள்ளன என்பது சில கல்வெட்டுக்களால் வெளியாகின்றது. ஆகவே, இந்நாடு முற்காலத்தில் தஞ்சைஜில்லா நன்னிலந்தாலூகாவில் இருந்திருத்தல்வேண்டும். எனவே இந்நாட்டிலுள்ள தஞ்சாவூரும் நன்னிலந்தாலூகாவில் இருத்தல்வேண்டும் என்பது திண்ணம். மாயூரத்திலிருந்து திருவாரூர்க்குச் செல்லும் இருப்புப்பாதையில் வெட்டாற்றிற்கு வடகரையில் திருவிற்குடி என்னும் புகைவண்டிநிலையம் ஒன்று உளது. இதற்குக் கிழக்கே சுமார் ஐந்துமைல்தூரத்தில் தஞ்சாவூர் என்ற ஊர் ஒன்று இருக்கின்றது. நன்னிலந்தாலூகாவிலுள்ள இத்தஞ்சாவூரே நம்பியாண்டார் நம்பியும் சேக்கிழாரடிகளும் கூறியுள்ள மருகல்நாட்டுத் தஞ்சாவூராகும். இதுவே, செருத்துணைநாயனார் அவதரித்த திருப்பதி என்பது நன்கு துணியப்படும்.

## II

சிவனடியார் அறுபத்துமூவருள் புகழ்த்துணைநாயனார் என்பவரும் ஒருவர். இவர் செருவிலிபுத்தூரில் ஆதிசைவமரபிலே தோன்றிச் சிவபெருமானை முறைப்படி அருச்சித்துவரும் நாட்களில், கொடியபஞ்சம் உண்டாக, அதனைச் சிறிதும் பொருட்படுத்தாமல் தளர்ச்சியுற்றநிலையிலும் தம் தொண்டினைக் குறைவறச் செய்து

---

[1] ஒரு வணிகனுக்குத் திருஞானசம்பந்தசுவாமிகளால் திருமருகலில் விடந்தீர்க்கப்பெற்று மணஞ்செய்விக்கப்பெற்ற வரலாற்றில்வரும் வைப்பூர் இதுவேயாம். (பெரியபுராணம் — திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகள் புராணம். பா. 48)

கொண்டுவந்தனர். நாள்தோறும் வறுமையால் மெலிவுற்றுவந்த புகழ்த்துணையார் ஒருநாள் சிவபெருமானுக்குத் திருமஞ்சனமாட்டும்போது அவ்விறைவன் திருமுடிமீது திருமஞ்சனக்குடத்தை உடற்றளர்ச்சியினால் தாங்கமுடியாமற் போட்டுவிட்டார். உண்மைத்தொண்டராகிய இவ்வடிகளது வறுமை ஒழியுமாறு பஞ்சம் நீங்கும்வரையிற் சிவபெருமான் நாள்தோறும் இவருக்கு ஒருபொற்காசு அளித்துவந்தனர். படிக்காசுபெற்ற புகழ்த்துணையார் இறைவன் திருவருளை நினைந்துநினைந்து மனம் உருகித் தம் திருத்தொண்டை முட்டின்றிச் செய்துவந்தார். பஞ்சமும் நீங்கிற்று. என்றாலும் தம் திருத்தொண்டை வழாது புரிந்துவந்த இவ்வடிகள் இறுதியில் சிவபதம் எய்தினர். இவ்வரலாற்றைப் பெரியபுராணத்தில் காணலாம்.

திருத்தொண்டர்திருவந்தாதியின் ஆசிரியராகிய நம்பியாண்டார்நம்பியும், பெரியபுராணத்தின் ஆசிரியராகிய சேக்கிழாரடிகளும், புகழ்த்துணைநாயனார் அவதரித்துத் தொண்டுபுரிந்து இறைவன் திருவடியையடைந்த திருப்பதி செருவிலிபுத்தூர் என்று தம் நூல்களிற் கூறியுள்ளனர்.

இதனை,

செருவிலி புத்தூர்ப் புகழ்த்துணை வையஞ் சிறுவிலைத்தா
உருவலி கெட்டுண வின்றி உமைகோனை மஞ்சனஞ்செய்
தருவதோர் போதகை சோர்ந்து கலசம் விழத்தரியா
தருவரை வில்லி அருளின் நிதியது பெற்றனனே.

(திருத்தொண்டர்திருவந்தாதி-பா. 67.)

செருவிலிபுத் தூர்மன்னுஞ் சிவமறையோர் திருக்குலத்தார்
அருவரைவில் லாளிதனக் ககத்தடிமை யாமதனுக்
கொருவர்தமை நிகரில்லார் உலகத்துப் பரந்தோங்கிப்
பொருவரிய புகழ்நீடு புகழ்த்துணையார் எனும்பெயரார்.

(பெரியபுராணம்-புகழ்த்துணைநாயனார்புராணம்-பா-1)

என்ற பாடல்களால் இனிதுணரலாம். புலவர்பெருமான்களாகிய இவ்விருவரும் இங்ஙனம் கூறியிருக்க, சந்தானாசாரியருள் ஒருவராகிய கொற்றங்குடி உமாபதிசிவனார் தாம் இயற்றியுள்ள திருத்தொண்டர்புராணசாரத்தில் புகழ்த்துணையாரது திருப்பதி

அழகார் திருப்புத்தூர் என்று குறித்துள்ளனர்.* எனவே, செருவிலிபுத்தூர்க்கு அழகார் திருப்புத்தூர் என்ற பெயரும் உண்டு போலும். ஆனால் செருவிலிபுத்தூர் என்ற பெயருடைய ஊர் இந்நாளில் யாண்டும் காணப்படவில்லை. நாயன்மார்கள் அவதரித்தருளிய திருப்பதிகளை யாவரும் அறிந்துகொள்ளுமாறு மிகத் தெளிவாகக் கூறிச்செல்வது சேக்கிழாரடிகள்பாற் காணப்படும் தனிச்சிறப்புக்களுள் ஒன்றாகும். இவ்வுண்மையை, ஆனாயநாயனாரது திருப்பதி மேல்மழநாட்டிலுள்ள மங்கலம் எனவும், திருநாளைப் போவாரது திருப்பதி மேற்காநாட்டிலுள்ள ஆதனூர் எனவும், குறும்பநாயனாரது திருப்பதி மிழலைநாட்டுப் பெருமிழலை எனவும், செருத்துணையாரது திருப்பதி மருகல்நாட்டுத் தஞ்சாவூர் எனவும் அடிகள் கூறியிருத்தலால் நன்கறியலாம். இத்தகையார் புகழ்த்துணையாரது திருப்பதியாகிய செருவிலிபுத்தூர் எந்நாட்டில் உள்ளது என்பதை உணர்த்தாமைக்குக் காரணம்புலப்படவில்லை. இந்நிலையில், உமாபதிசிவனார் அஃது அழகார்திருப்புத்தூர் என்று எவ்வாறுணர்ந்தனரென்பது ஆராய்தற்குரியதொன்றாம்.

இனி, ஏழாந்திருமுறையில் புகழ்த்துணையார்வரலாற்றைக் கூறும் பாடல் ஒன்றுளது. அது சைவசமயகுரவராகிய சுந்தரமூர்த்திசுவாமிகள் அருளிய அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகத்திலுள்ளது. அஃது,

அகத்தடிமைசெய்யுமந்தணன்தான் அரிசிற்புனல்கொண்டுவந்தாட்டுகின்றான்
மிகத்தளர்வெய்திக் குடத்தையுநும் முடிமேல்விழுத்திட்டு நடுங்குதலும்
வகுத்தவனுக்குநித் தற்படியும் வருமென்றொருகாசினை நின்றநன்றிப்
புகழ்த்துணை கைபுகச்செய்துகந்தீர் பொழிலார்திருப்புத்தூர்ப் புனிதனீரே.

* புண்ணியர்கள் புகழ்அழகார் திருப்புத்தூர்வாழ் புகழ்த்துணையார்
அகத்தடிமைப் புனிதர் சின்னாள்
மண்ணிகழ மழைபொழியா வற்காலத்தால் வருந்துடலம்
நடுங்கிடவு மணிநீ ரேந்தி
அண்ணல்முடி பொழிகலசம் முடிமேல் வீழ அயர்ந்தொருநாள்
புலம்பவரன் அருளா லீந்த
நண்ணலரும் ஒருகாசுப் படியால் வாழ்ந்து நலமலிசீர்
அமருலகம் நண்ணி னாரே.

(திருத்தொண்டர்புராணசாரம்—பா. 61)

என்பதாம். இப்பாடலில் கூறப்பெற்றுள்ள புத்தூர் அரிசில் என்னும் ஆற்றின் தென்கரையிலிருத்தலால் அரிசிற்கரைப்புத்தூர் என்ற பெயரையும் எய்தியுள்ளது. அன்றியும், இதனை அழகார் திருப்புத்தூர் என்று சுந்தரமூர்த்திசுவாமிகள் வழங்கியுள்ளனர் என்பது, 'அரிக்கும் புனல்சேர் அரிசிற்றென்கரை அழகார்திருப் புத்தூர் அழகனீரே' என்னும் அவ்வடிகளது திருவாக்கினால் அறியப்படுகின்றது. எனவே, புகழ்த்துணையாரது திருப்பதி அழகார் திருப்புத்தூர் என்று உமாபதிசிவனார் தம் திருத்தொண்டர்புராணசாரத்தில் குறித்தமைக்குக்காரணம் சுந்தரமூர்த்திசுவாமிகளது அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகமேயாகும். இந்நாளில், அழகார் திருப்புத்தூர் என்பது அழகாத்திரிப்புத்தூர் எனவும் அழகாப் புத்தூர் எனவும் வழங்கப்படுகின்றது. இது, கும்பகோணத்திற் குத் தென்கிழக்கில் மூன்றுமைல்தூரத்தில் குடவாயிலுக்குச் செல்லும் பெருவழியில் அரிசில்ஆற்றின் தென்கரையில் இருக்கின்றது. இத்திருப்பதியில் அவதரித்துத் திருத்தொண்டுபுரிந்து இறைவன் பாற் படிக்காசுபெற்ற புகழ்த்துணையாரைத் தம் பதிகத்தில் வைத்துச் சிறப்பித்துள்ள சுந்தரமூர்த்திசுவாமிகள் 'அரிசிற்புனல் கொண்டுவந் தாட்டுகின்றான்' என்று அரிசிலாற்றையும் குறித்திருப்பது உணரற்பாலதாகும். திருஞானசம்பந்தசுவாமிகளும் தமது அரிசிற்கரைப்புத்தூர்ப் பதிகத்தில்,

'அலந்த அடியான் அற்றைக் கன்றோர் காசெய்திப்
புலர்ந்த காலை மாலை போற்றும் புத்தூரே'

என்று புகழ்த்துணையார் இத்தலத்திற்செய்த திருத்தொண்டைப் பாராட்டியுள்ளனர். ஆகவே, சைவசமய குரவர்களாகிய திருஞானசம்பந்தராலும், சுந்தரமூர்த்திகளாலும், குறிக்கப்பெற்றதும் இக்காலத்தில் அழகாப்புத்தூர் என்று வழங்கப்படுவதும் ஆகிய அரிசிற்கரைப்புத்தூரே அறுபத்துமூன்றுநாயன்மார்களுள் ஒருவராகிய புகழ்த்துணைநாயனாரது திருப்பதி என்பது நன்குவிளங்குதல் காண்க.

---

உ

# செம்மையின் ஆணி.

[திரு. E. S. வரதராஜய்யரவர்கள், B, A., தமிழ் விரிவுரையாளர்,
அண்ணுமலைபல்கலைக்கழகம்.]

செம்மை என்பதற்கு நடுவுநிலைமையெனப் பொருள் கூறுவர். நடுவுநிலைமையின் இலக்கணம் உணர்த்தவந்த திருவள்ளுவர், 'சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற் கோடாமை' என்றும், அது சான்றோர்க்கணியென்றும் அறைந்தனர். தன்பால் வைக்கப்பெறும் பொருள்களின் நிறையைத் தெரிவிப்பதன் முன்னர்த் தனது இருதட்டையும் ஏற்றத்தாழ்வின்றிச் சமமாக்கிக் கொள்ளும் துலாக்கோலின் தன்மை நன்குகூறப்பட்டது. ஒருதலைச் சார்பின்றிச் செவ்விதானமனத்தோடும் நடந்துகொள்வது செம்மையென ஒருவாறுரைக்கலாம். செம்மையின் ஆணியெனவே நடுவுநிலைமையாகிய தேருக்கு ஓர் அச்சாணி, அல்லது நடுவுநிலைமையாகிய நுகத்துக்கு ஓர் பகலாணி என்பதுபொருள். 'உருள்பெருந் தேர்க் கச்சாணி' எங்ஙனம்வேண்டப்படுவதோ, அவ்வாறு வேண்டப் படுபவரை அச்சாணி என்பர். பகலாணி என்பது நுகத்தின் நடுவில் அமைக்கப்பட்டுச் சகடச்செலவை ஒழுங்குசெய்வதாகும். 'நெடுநுகத்துப் பகல்போல' என்பது பட்டினப்பாலை. 'நுகத்துப் பகலாணி போன்று' என்பது பழமொழி. எனவே, இவ்வாணிகள் போன்று நீதியும் நடுநிலைமையும்பற்றி ஒழுகுபவரை ஆணி என்பர் என்பது பெறப்பட்டது. வாரிதிகடந்து நோலர்க்கடந்த மாருதத்தின் ஆருயிர்ச்செல்வனை அநுமானை இராகவன்,

> "மாணியாம் படிவ மன்று மற்றிவன் படிவ மைந்த
> ஆணியிவ் வுலகுக் கெல்லாம்."

என்றனர். நடுவுநிலைமை முதலிய மாருதியின் சிறந்த பண்புகள் யாவரும் அறிந்தனவே.

நிற்க, செம்மையின் ஆணியெனக் குறிக்கப்பட்டவர் யார்? எதுபற்றி அவ்வாறு குறிக்கப்பட்டனர்? என்பதை ஆராய்வோம்.

இத்தொடர் இராமாயணகதாநாயகனை இராமன் இளையபெருமாளிடம், தனது அடுத்த இளவலான பரதாழ்வானைப்பற்றிக் கூறிய போது கையாளப்பட்டது. தாசரதி இவ்வாறுகூறியதன் காரணம் இனிக்கூறப்படும். சிறந்த நாடகஆசிரியர்போன்றே இலக்கிய ஆசிரியரும், பாத்திரங்களின் குணப்பண்புகளைக் கூறமிடத்துத் தாமே நேரிற்கூறாது, அவைகளே தமக்குள் கூறுமாறு செய்வர். நாடகங்களும் காவியங்களும் சுவைஉள்ளனவாக விளங்குவதற்குக் காரணமான பல ரகசியங்களில் இதுவும் ஒன்று. இந்தமுறையிற் கம்பன் சித்திரித்த பரதாழ்வான் பண்புகளை அறிய முயல்வோம்.

பரதாழ்வான்பிறப்பைக் கூறும்போதே கவிஞர் "கரதல முற்றுளிர் நெல்லி கடுப்ப, விரத மறைப்பொருள் மெய்ந்நெறி கண்ட பரதன்" எனவும், வரதன் எனவும் கூறினர். உள்ளங்கை நெல்லிக் கனிபோன்று, விரதங்களின் உட்கருத்துக்களையும், மறைகளின் கருத்துக்களையும் ஆராய்ந்து, நன்னெறியை உணர்ந்த பரதன் என்பது இதன் பொருள். சகல கல்யாணகுணங்களையும் பரிப்பவன் அல்லது தாங்குபவன் ஆகலின் பரதன் எனப்பட்டான் என்பர். இனி வரதன் என்பதற்குப் பிறர்வேண்டியவரங்களை மறுதீயும் வள்ளல் என்பது பொருள். இவனது நற்பண்புகளைப் பொற்புறப் புகலும் கௌசிகமுனிவன்,

"தள்ளரிய பெருநீதித் தனியாறு புகமண்டும்
பள்ளமெனுந் தகையானைப் பரதனெனும் பெயரானை
எள்ளரிய குணத்தாலு மெழிலாலு மிவ்விருந்த
வள்ளலையே யனையானைக் கேகயர்கோன் மகள்பயந்தாள்"

என்று கூறினன். அறிஞர்களால் விலக்குவதற்குக்கூடாத சிறந்த நியாயங்களாகிய ஒப்பற்ற ஆறுகள் தன்னிடம் வந்து சேர்தலால் நிறைந்து விளங்குகின்ற ஆழமாகிய கடலென்று கூறும்படி நற்பண்புகளையுடையவனும், எவரும் இகழமுடியாத சிறந்த பண்புகளாலும், அழகாலும், இங்கே வீற்றிருக்கும் இராமபிரானையேஒத்தவனுமான பரதனென்ற பெயருள்ள புதல்வனைக் கைகேயிபெற்றாள் என்பது இதன்கருத்து. நதிகளுக்குச் சமுத்திரகாமினி என்ற பெயர். இங்கே நீதிகளாகிய ஆறுகள் பரதனாகிய ஆழியிற்சென்று படிந்தன என

அழகுபெற உருவகித்தார். மேலும், பரதாழ்வான், தனது சிறந்த பண்புகளாலும் உடல்வனப்பாலும், இராமனைநிகர்த்து விளங்கினன் என்றார். இவ்விடத்து ஓர் ஐயம் நிகழ்தல்கூடும். பிறந்தஞான்றே பரதாழ்வானுடைய பல நற்பண்புகளைக் கூறுதல் எவ்வாறு அமையும்; அஃது இயலக்கூடியதா? என்பது. இராமாயண பூர்வக்கதையில் இராமராதிநால்வரும் திருமாலின் அம்சம் எனக் கூறியதுகொண்டு இவற்றை உய்த்துணர்ந்து முனிவர் கூறியிருக்கலாம். இன்றேல் குழந்தையின் அங்கஇலக்கணங்களைக்கொண்டும் முக்காலமும் உணரவல்ல முனிவர் கூறியிருத்தலும் கூடும்.

இனி, இவை வெற்றுரையா, வெறும் புகழ்ச்சியுரையா, அல்லது உண்மைதானா என்று துருவி ஆராய்வோம். கைகேயிக்கு அளித்த வரங்களினால், பரதனுக்கு அரசுரிமையும், இராகவனுக்குக் காட்டு வாழ்க்கையும் ஏற்பட்டன. நிகழ்ச்சியை உணர்ந்த இளையவீரன் நிலத்தில் வீழ்ந்த நெல்லிக்கனியெனக் குதிக்கின்றான். பரதனையும் அவன் அன்னையையும் பலபடியாக ஏசுகின்றான். இந்த நிலையில் சூரிய குலதிலகனான இராமபிரானுரைகள் கவனிக்கத்தக்கன. தன் இளவலைநோக்கிப் புவியில் மயக்கமற்ற நன்னெறியில் வாழுகின்ற துணையாகிய உடன்பிறந்தானைப் போரில்வென்ற பின்னர்த்தானோ சீற்றம் தணிவது? என்று வினவி அவனுக்கு நல்லறிவுகொளுத்துகின்றான். இராமபிரான் பரதன்பாற் கொண்டிருந்த நல்லெண்ணத்தை இங்கே காணலாம்.

நிற்க, பரதாழ்வான் கேகயநாட்டில் தனது மாமன் வீட்டிலிருந்தவன், அயோத்திபோந்து, இராமனையே நினைந்தவண்ணம் அரண்மனைபுகுந்து அன்னையைக்கண்டு,

> "எந்தையும் யாயுமெம்பிரானும் எம்முனும்
> அந்தமில் பெருங்குணத் திராமன்"

என்னும் பெருந்தகையைக்காணவேண்டும் என்று கூறுகின்றான். இச்சொற்களிலிருந்து அவன் இராமன்மேற் கொண்டிருந்த அளவு கடந்த அன்பும் கௌரவமும் பிறவும் விளங்கும். வஞ்சனையால் அரசெய்த நினைந்த கைகேயி, 'இராமன் வனம்புகுந்தான்' என்று

கூறிய சொல் அவன் செவியில் நாராசம் காய்ச்சியூற்றியது போல் விழுந்தன. அந்நிலையில் துயரம் ஒரு புறமும், இன்னும் என்ன கோரமான செய்திகள் கேட்கநேருமோ என்ற அச்சம் ஒருபுறமும் அவனைப் பற்றிக்கொண்டன. பின்னர்க் கைகேயி தசரதன்பால் தான் வரம்பெற்றதும், அது காரணமாகத் தான் வனம்படர்ந்ததும், அவன் பிரிவைத்தாங்காமல் மன்னவன் மடிந்ததும் முறையே கூறப் பரதனுக்குஉற்ற வெகுட்சிக்கு அளவேயில்லை. அப்பொழுது வெகுளிமிகுதியால், அவன்பால்உற்ற மெய்ப்பாடுகள் கம்பரால் நன்கு கூறப்பட்டுள்ளன. பொங்கியெழுந்த கோபமிகுதியால், கொடியசெயல் புரிந்த அந்தக் கேகயன்மகளைத் தாயென்றுநினைந்திலன். தாய்க் கொலைக்கும் அஞ்சினனில்லை. ஆயினும் அவனைக்கொன்றால் பெருந் தகையான இராமன் வெகுளிக்குத் தான் பாத்திரன்ஆக நேருமே என்றஞ்சி அவளைக் கொல்லவில்லை. பின்னர்த்தன் அன்னையை நோக்கிப் பரதாழ்வான், கொடுஞ்சொல்லினால் ஓர் அரசன் மாய்ந்தான்; ஒருவீரன் தனக்குரிய அரசினைக்கைவிட்டு வனம்படர்ந்தான்; தன் தாய் வழியல்லாவழியில் இரந்துபெற்றுத் தனக்களித்த ஓர்பூமியை ஆட்சிபுரியப் பரதன் என்ற பேதை தலைப்பட்டான்; நன்று நன்று அறநெறியென நினைந்து மனம்புழுங்கினான். பரதனது சீரிய பண்புகளை இச்செய்திகள் நன்குவிளக்கும். பிறகு கைகேயியின் வஞ்சனைச் செய்கையைக் கோசலை கூறக்கேட்டு, அவன் செய்த சூளுறவுகள் அவள் மனத்தூய்மையையும் செம்மையையும் நன்கு காட்டும். இராமபிரான் தான் காடுசெல்வதற்குத் தன்அன்னை கோசலையிடம் விடைபெறச்சென்று நின்றபோது, அவ்வம்மையார் பரதனை "நிறைகுணத்தவன்" என்றும் இராமனைக்காட்டிலும் நல்லவன் என்றும் கூறுகின்றனள்.

நிற்க, பரதன் தன் தாய்மார்மூவரும் உடன்வரப் பரிவாரங்களோடும் இராமனைத்தேடிச் செல்கின்றான். துங்கமார் நதியாம் கங்கைக்கரையை அணுகவே, உடன்வந்த சுமந்திரன், சேய்மையினில் நின்றுகொண்டிருந்த குகனது பெருங்குணங்களைப் பரதனிடம் கூறி 'அவன் உங்கள்குலத் தனிநாதர்க் குயிர்த்துணைவன்' என்று மொழிந்த அளவிற் பேரார்வம்பெருக, 'மன்முன்னே தழீஇக் கொண்ட மனக்கினிய துணைவனேல், என்முன்னேயவற்காண்பேன்'

என எழுந்து விரைந்தான். தன் அண்ணனும் தெய்வமுமான இராமனால் தழுவப்பட்டவன் எனின் அவன் தன்தமையனே என்றும், அத்தகைய பெருமைவாய்ந்தவன் தன்னைவந்து காணுமுன்பு தானே அவனைக் காண்பதே முறையென்றுங் கூறிக் காண எழுகின்றான். பின்னரும் பரதாழ்வான், தன் அன்னை கோசலையிடம் குகப்பெருமானை அறிமுகஞ்செய்விக்கும்போதும், அவன் இராகவற்கு இன்றுணைவன் என்றும், இலக்குவற்கும் இளையவனான சத்துருக்கனற்கும் தனக்கும் மூத்தான்என்றுங் கூறி, 'அன்பீன்ற குழவி' யெனப்படும் தன் அருளின்திறத்தை வெளிப்படுத்துகின்றான். 'உண்ணும்சோறும், பருகும்நீரும், தின்னும்வெற்றிலையும் எல்லாம் கண்ணனெம்பெருமான்' என்று பத்திப்பெருக்காற் கூறிய பெரியார்பாசுரம் இங்கே நினைவிற்கு வருகின்றது.

இந்நிலையில், கங்கையிருகரையுடையவனும், கணக்கிறந்த நாவாய் படைத்தவனுமான குகன், கரையைநோக்கிக் கடுகுகின்ற சேனையின் பேராரவாரத்தைக்கண்டு, பரதனைத் தன் உயிர்த்துணைவனான ரகுநாயகனது மாற்றான்எனக் கருதித் தன் படைத்தலைவர்கட்கு வேண்டிய ஆணைகளையிட்டுவிட்டுத் தான்மட்டுந் தனியே கரைநோக்கி வந்தான். வந்து அவன் கண்டதென்ன? அதனைக் கம்பன்வாயிலாகவே அறிய முயல்வோம். அச்செய்யுள் பின் வருமாறு:

"வற்கலையி னுடையானை மாசடைந்த மெய்யானை
நற்கலையின் மதியென்ன நகையிழந்த முகத்தானைக்
கற்கனியக் கனிகின்ற துயரானைக் கண்ணுற்றான்."

என்பன அவ்வுருக்கமான வரிகள் ஓவியன் படம்பிடித்துக்காட்டுவதுபோல், கவி இங்கே பரதன்நிலையைக்காட்டுகின்றான். இராமன் புனைந்த தவக்கோலம் பொய் தான்கொண்டதே மெய்யென்று கண்டோர் வியந்துகூறும்படி, மாவுரிதரித்தவனும், இராமபிரானைக் கண்டு தன் திருமுடியை அவன் பாதகமலத்திற் சேர்த்தாலன்றி நீராடுவதில்லை என்ற மனக்கோளுடையவன் ஆதலின் அழுக்கேறிய மேனியோடு கூடியவனும், சிறந்தகலைகளோடு பொருந்தாத சந்திரனைப்போன்றும் நல்ல கலையறிவுடன்கூடாத அறிவுபோன்றும் ஒளியிழந்தவதனத்தையுடையவனும் கல்லும்கனிந்துருகுமாறுதுயறுற்று

நின்ற பரதாழ்வானைப்பார்த்தான். உடனே மாற்றான்எனக் கருதிப் பொருவான் கைக்கொண்ட வில், தன்னை அறியாமல் தரையில்வீழ மனம்வெதும்பிச் செயலற்றுநின்றான். பின்னர் புளிஞர்கோமான் பரதன்பால், அவன் வந்தசெய்தியை வினவ, அப்பரதாழ்வான், உலகமுழுவதையும் வறிஞன்ஓம்புமோர் செய்யெனக்காத் தினிதரசு செய்த தந்தையான தசரதன் தனது முன்னோர்கள் கடைப்பிடித் தொழுகிய நீதியினின்றும் வழுவினன் என்றும், அந்த அநீதியை அகற்றிப் பழியைப்போக்கும் கருத்தொடு, இராமபிரானை அழைத்துப்போவதற்குப் போந்ததாகவும் புகன்றான். உடனே வேடர்தலைவன், பக்திபரவசனாகிப் பரதன்பாதங்களைப் பற்றிக் கொண்டுகூறிய புகழுரை இங்கே குறிக்கத்தக்கது. குகப்பெருமான், "புகழுடன் கூடியவனே, உனது அன்னையாகிய கைகேயியின் வார்த்தைகளைக்கேட்டு உனது தந்தை உனக்கு அளித்த பேரரசைக் கொடியவினையை விலக்குவதுபோல் விலக்கிவிட்டுக் கவலைமிக்கவனாய் இவ்விடம்வந்தனை என நினைக்கும்போது, ஆயிரம் இராமபிரான்கள் என்றாலும் உன்ஒருவனுக்கு ஒப்பாவரோ என்று வாயாரப்புகழ்கின்றான். இவ்வாறு குகன்கூறியது இராமபிரானைக் குறைத்துக்கூறும் நினைவாலன்று, பரதனது விருப்புவெறுப்பற்ற நிலையைப் பாராட்டுவதற்கேயாகும். அவனதுபெருமையை அளந்து கூறத் தனக்குப் போதிய ஆற்றலின்றென்றும் சூரியன் தனது ஒளிக்கற்றையால் சந்திரன் முதலிய தாரகைக் குழாங்களின் ஒளிகளை அடக்குவதுபோல, அரசர்களாற் பலபடப்பாராட்டப்பெறும் பானுகுலத்தின் பரந்தபெருமையெல்லாம், தனது கீர்த்திக்குள் அடங்குமாறு பரதன்செய்துவிட்டான் என்றும் கூறினன்.

பின்னர்க் குகப்பெருமானிடம் விடைபெற்றுப் பரதன் சித்திரகூடமடைந்தான். தனது பெருஞ்சேனையைப் பின்வருமாறு பணித்துத் தான்மட்டும் தன் இளவலான சத்துருக்கனனோடு சென்றான். இந்நிலையிற் பெருஞ்சேனையின் செலவால் எழுந்த துகள் வானையளாவச் சேய்மையிலிருந்த இலக்குவன்கண்டு, தன் அண்ணன் உயிருடனிருப்பின் எந்தக்காலத்திலேனும் தனக்குரிய அரசிற்குரிமைகொண்டாடுவானென்று அவனைக் கொன்று விடுவதே கலமென நினைந்து, மாற்றானாகிய பரதனை வருகின்றான்

என்று தவருகக்கருதித் தன் தமையனிடம் தனது புயவலியைப் பலபடக்கூறிப் பரதனை இழித்துரையாடியபோது, ரகுநந்தனன் தம்பியைநோக்கிக்கூறும் பகுதிகளில், பரதனுடைய பல்வேறு பண்புகளையும் பரக்கக்காணலாம். இலக்குவனைப் பார்த்துப் பரதனது செய்கைகள் எல்லாம், வேதங்கள் எவ்வளவுள்ளனவோ, அவையெல்லாம் சொல்லத்தக்க தன்மையுள்ளனவே. நீ சொல்லும் அத்தன்மையனவான தகுதியற்றகாரியங்கள் அல்ல. ஆயினும் என்பால் நீ வைத்த பேரன்பினுல் அந்த உண்மையைத் தெரிந்து கொண்டாயில்லை. அவனது ஒழுக்கங்கள்யாவும் மறைகளே எடுத்துக் காட்டத்தக்கவை; எனவே வேதத்திற்குமாருன செயல் பரதனிடம் காண்பதரிது என்ருன். இவ்விடம் ஓர்செய்தி குறிக்கற்பாலது. கவந்தன் சாபவிடைபெற்ற நிலையில் இராமபிரானைப் புகழ்ந்துகூறுகின்ருன். அங்கே, 'நின்செய்கைகண்டு நினைந்தனவோ நீண்மறைகள், உன்செய்கை அன்னவைதாம் சொன்ன ஒழுக்கினவோ' என்று பாராட்டுவதைக் காணலாம். சருவேசுவரன் ஆன இராமபிரான் செயலும், வேதத்தின் பொருளும் ஒத்திருந்தன என்பது இதன்கருத்து. இவ்வண்ணமே, வனஞ்செல்லுமாறு இராமனைச் செய்த கைகேயியை வைதெழுந்த இலக்குவனை நோக்கி அயோத்திக்கிறை 'இயைந்த நீதி வளையாவரு நன்னெறி நின்னறி வாகும்' என்றும் "வாய்தந்தன கூறுதியோ மறைதந்த நாவால்" என்றும் கூறி இளையவன் செயலும் மறைகள் கூறுவனவற்றையே பின்பற்றிநின்றதெனக் கூறியது காணலாம். இச்சகோதரர் நால்வரும் எவ்வகையினும் தன்னிகரற்றுவிளங்கும் தகைமையர் என்று கூறிக் கதாபாத்திரங்களின் உயர்வை உணர்த்துவதற்காகக் கவி இவ்வாறு கூறியிருத்தல் அறிந்து மகிழத்தக்கது.

பின்னும் கூறுவான்தொடங்கிப் பரதாழ்வான் "அண்ணனை என்னிடம் உண்டான அன்பினுல் இங்குவருவான்என்று எண்ணுதலும், பேரரசை என்னிடம் தருவான்என்று நினைதலும் தவிர்த்துச் சேனையோடு என்னுடன் போர்புரிய வருகின்ருன் என்றெண்ணுதல் அறிஞர் செயலாகுமா? மற்றும் மிகவும் பெருமைவாய்ந்த அறக்கடவுள் வடிவமானவனும், நடுவுநிலைப்பண்பான தேரை நிலைநிறுத்தும் அச்சாணிபோன்றவனுமான பரதாழ்வானைப்பற்றி நீ அவ்வாறு

கருதலாகுமா? நீ என்சொல்லை உறுதியாக நம்பு; அவன் இங்கு வந்தது என்னைக் காணும்பொருட்டே. இதனை நீ பின்பும் நேரில் அறியப்போகின்றாய்" என்றான்.

இங்கும் ஓர்ஐயம் நிகழ்தல்கூடும். பேரறிவாளியாகவும் சேடன் அவதாரமாகவும் விளங்கிய இளையவில்லிக்குத் தன்நேர்தமையனான பரதன்பண்புகள் தெரியாவா? பின்னர் ஏன் பிறர் அறிவுரை கூறுமாறு அவன் நடந்துகொள்ளவேண்டும். என்ற வினா எழுதல் இயல்பே. இதற்கு உத்தரம் கவியே கூறியுள்ளார். இராமன் மேல் நிமிர்ந்த காதலே பிறரை ஐயுறுமாறு இலக்குவனைத் தூண்டியது. ரோமபுரித்தலைவனான ஜூலியஸ் ஸீஸர் என்பவனைச் சூழ்ச்சி செய்து கொன்றபோது, அக் கொலைக்குழுவினருள் ஒருவனான ப்ரூட்டஸ் என்பவனை, அவ்வாறு கொலைசெய்யவிசைந்ததன் காரணம் வினவியவிடத்து, அவன் 'அவ்வாறுசெய்தது ஸீஸரின் மேற் கொண்ட அன்பின் குறைவினாலன்று; ரோமபுரியின்மீது தான் கொண்ட அன்பின்மிகுதியால்' என்றுகூறியது என் நினைவிற்கு வருகின்றது. அவ்வண்ணமே சுமித்திரைச்சிங்கத்தின் செய்கைகளும், இராமபிரான்மேல் ஏற்பட்ட அன்பின்பெருக்கால் என்று கோடலே முறை.

நிற்க, இலக்குவனும் இராமபிரானும் உரையாடிநின்ற அத் தருணத்தில் பரதாழ்வான் காட்சியளிக்கின்றான். இருவரும் காண்கின்றனர். கூப்பியகையனாய் அன்னஆகாரமின்மையாற் றளர்ந்த உடலோடுகூடியவனும், இடைவிடாதழுவதாற் பொலிவழிந்த கண்களையுடையவனும், துன்பமேஉருவுகொண்டாற்போன்று தோன்றுபவனுமான தனது ஆருயிரிளவலை அயோத்திக்கிறை நன்றாகப் பார்த்தான். பின்னர் ஆரவாரத்தோடும் வீரமுழக்கம் செய்து நின்ற தன்தம்பி இலக்குவனை விளித்துத் தேர்முதலிய பெரிய சேனைகளையுடைய அந்தப் பரதன் தன்மீது சினந்துவந்த போர்க் கோலத்தை நன்றாகப்பார்க்குமாறு பகர, இளையவன் தனது பெரும் பிழையையும், பாகவத அபசாரம்செய்த தனது மடைமையையும் உணர்ந்தான். அவ்வளவில் பரதனை முன்பு நிந்திக்க எழுந்த சொற்கள் தளர்ந்தன. அவை பிறத்தற்கு ஏதுவாகநின்ற சினம் சிதைந்தது. அறிவும் தளர்ந்தது. உடல் சிந்தைவசமாகலின்

பரதனொடு பொருமாறு தன் கரத்திற்பிடித்த வில் அவனது தவப் பெருங்கோலத்தைக்கண்டு நிலைகலங்கி மனமழிந்த குகப்பெருமான் கையினின்று வீழ்ந்ததுபோலத் தானே நழுவிவீழ்ந்தது. உத்தம புத்திரனான பரதாழ்வானைக் காரணமின்றி ஐயுற்றதால் வெளிப் பட்ட கண்ணீரும் வில்லுடன் பூமியில் விழுந்தது. முகம் ஒளி குன்றியது. இவ்வண்ணம் பலரும் இரங்கத்தக்க பரிதாபநிலையில் நின்றான் பாவை சுமித்திரை பயந்த தூயநற் செல்வன். பரதனோ, இறந்த தன்தாதை உயிர்பெற்றெழுந்திடக் கண்டால் எத்தகைய உவகையெய்துவானோ, அத்தகைய உவகையுடன் அகமலர்ந்து இராமபிரானைத் தழுவினான்.

இருவரும் பலசெய்திகளைப்பற்றிப் பேசினர். பரதன் எவ் வளவோ முயன்றும் ஜானகிராமனது மனத்தை மாற்றக்கூடவில்லை. முடிவில் எல்லாவுலக இன்பங்களையும் கொடுத்தருளும் இராமனது திருவடிநிலைகளைவேண்டக் கருணைக்கடலாகிய காகுத்தன் மனங் களித்தருளினான். அவற்றைத் தனது மணிமுடியெனச் சிரமேற் கொண்டு தன் நகர்க்குத்திரும்பி, இராமனில்லாத அயோத்தி யாகலின் அந்நகர் அணுகத்தக்கதன்றென்றுகருதி அதன் அணி மையிலிருந்த நந்திக்கிராமம் என்னும் ஊரிலேயே தங்கியிருந்து இராமபிரான் வரவை மழைவரவெதிரும் வானப்புள்போன்று எதிர் பார்த்திருந்தான்.

இதுகாறும் நற்பண்புகட்கெல்லாம் தனி உறையுளான பரதாழ் வானைப்பற்றி அவன் அன்னையான கோசலையும் அண்ணனான இராம பிரானும், வேடர் பிரானான குகனும் புகழ்ந்துகூறக் கேட்டோம். ஒருவன் மற்றொருவனை யுயர்த்திக்கூறுதற்குப் பலகாரணங்கள் உண்டு. தனக்கு அவனால் ஆகக்கூடிய காரியத்திற்காகப் புகழ லாம். அன்புபற்றிப் புகழலாம். உறவு குறித்தும் அவ்வாறு செய் தல் கூடும். ஆனால் அந்தவுரை முற்றும் கொள்ளற்பாலதன்று. மற்றும் நேரெதிரியாகவுள்ளவன் தன் மாற்றானையோ, அவனது துணைவரையோ புகழ்வனெனின் அப்புகழ்ச்சியுரையை நாம் முற்றும் ஏற்றுக்கொள்வதற்குத் தடையுமுண்டோ? இளையோன் என்றும் அநுபவமில்லாதவன் என்றும் போர்க்களத்தில் வடிவேற்

குமாரனை வசைகூறியிகழ்ந்த நேரலனான சூரபன்மன், பின்னர் அப் பெருமானது வீரஞ்செறிந்த வியத்தகு செயல்களைக்கண்டு மெய் யுணர்வுற்றுக் கூறிய,

"கோலமா மஞ்ஞை மீது குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தே னந்நாட் பரிசிலை யுணர்ந்திலேன்"

இப்பெருமான் யாவைக்கும் மூலமேயான மும்மூர்த்தியும் ஒன்றான மூர்த்தியேயன்றோ என்ற சொற்கள் இதயத்தினின்றும் உணர்ச்சி யோடொத்தவை என்று சொல்ல யார்தான் இசையார். அவ் வண்ணமே தனக்கு நேர்பகைவனும், தன் மார்பின்மீது ஒளிந்து வாளியெய்தவனுமான சக்கரவர்த்திதிருமகனைச் சூலியின் அருள்பெற்ற வாலி, பலவாறிகழ்ந்து, அவன் மகாஉத்தமனான பரதன் முன்னர்த்தோன்ற நேர்ந்ததே என்று வருந்துகின்றான். சகல நற்பண்புகளும் சிறப்பாகச் சகோதரவாஞ்சையும், நடுவு நிலைமையும், சாந்தமும் நிறைந்து விளங்கும் பரதனுக்கு நேர் தமை யனாக அவன் தோன்றியதைக்குறித்து இரங்குகின்றான். இத னின்று, பரதன் குணப்பண்புகளில் வாலி எவ்வளவு ஈடுபட்டிருந் தான் என்பதை நன்கு தெளிதல்கூடும். மேலும் வாலி சுக்கிரீவர் களின் போரில் இராகவன் தலையிடத்துணிந்து சுக்கிரீவனுக்கு அபயதானம் அளித்தபோது, இலக்குவன் அச்செயலைக் கண்டித் துக்கூற வைதேகிமணாளன் தன் பின்றோன்றலான இளையவீரனைப் பார்த்துக் கூறியதிலிருந்து பரதனது சிறப்பும் பெருமையும் செவ் விதின் உணரப்படும். "அத்தா இதுகேளெனத் தொடங்கிப் பித் துப்பிடித்த குரங்கினிடம் எவ்வகையான ஒழுக்கமுறையும் எதிர் பார்த்தல் கூடாதென்றும், எந்தக்குடும்பத்திலும் அண்ணன் தம்பி மார் தம்முட் சச்சரவின்றித் தூயமனத்தராய் நேயப்பான்மையுடன் விளங்குவார் எனின், பரதன் சகோதர அன்பிற் சாலச்சிறந்தவன் என எப்படிப் புகழெய்தக்கூடும் என்றும், சில இடங்களில் உடன் பிறந்தார்கள் தம்முட் கலாய்த்துப் பல தீங்கிழைப்பதுண்டு என்பதை எண்ணும்போதுதான், பரதன் சிறந்தவன் என ஏற்படும் எனவும் கூறினான். தனக்குள்ள சகலசொத்துக்களையும் துறந்து அசல், அப்பீல், ஸ்பெஷல் என்ற மூன்று நீதித்தலங்களினும் முறையே வழக்காடி முடிவில், 'இன்சால்வெண்ட்' ஆயினும் ஆவேன்

ஆனல் தன் அண்ணன் வீதத்திற்கு ஒருகாணி அதிகம் கொடேன் என்று மார்தட்டி தீரவாசகம் பேசி வீரநர்த்தனம் செய்யும் தீரசிகா மணிகள் உளர் என்றபோது தானே தனக் குரிமையாகக்கிடைத்த அரசுரிமையைவிட்டுத் தவக்கோலம்பூண்ட தாவில்கொள்கைக் காவலன் பரதனது பாவலர்போற்றும் பண்பும் பெருமையும் விளங்கும். தன் சிற்றப்பன்மக்களான பாண்டவர்க்குத் தன்காட்டில் ஊசிநாட்டும் இடமும் கொடேன் என்று கூறிக் கண்ணபிரான் முதலிய பலரும் பகர்ந்த அறிவுரைகளுக்குச் செவிசாய்க்காமல் வணங்கா முடிமன்னய் வாழ்ந்து முடிவில் ஆணிவேரும் அற்று அழிந்த துரியோதனன் வரலாறு கூறுவது தானே பாரதமென்னும் பேரிதிகாசம்.

நிற்க, ஆண்டு பதினன்கும் கழிந்தன. இராமன் மீண்டுவருவதாகக் குறித்தகாலம் கடந்தது, பரதன் தன் சூளுறவின்படி தீயில் விழ முயல்கின்றன் அங்கியை மும்முறை வலம் வந்தான். அகக் கண்ணல் இராமனைநோக்கினன். கருத்தை அவன்பாற்செலுத்திக் கனல்புக நின்றன். அந்நிலையில் மாசிலாக் கற்பினள் கோசலை அவன்பாலணுகித் தடுக்கின்றள். தடுக்கும்போது அவள் கூறிய அரியசொற்களைக் கேட்போம். கோடிக்கணக்கான இராமர்களெனிலும் அருளேவடிவமான பரதனுக்கு இணையாவாரோ. மற்றும் புண்ணியத்தின் வடிவென்று புகலும் அவனது உயிர் கழிந்தால், பின்னர், மண்ணும் விண்ணும் மடிந்தொழியாவா? என்றிரங்கிப் பரதனைப் பலபடியாகப் புகழ்கின்றள். அப்பொழுது மாருதத்தின் காதலனன அநுமன் தான் வந்திறங்கிய வேகத்தால், மூண்டெழுந்த எரியை அணைத்து, "ஐயன் வந்தனன், ஆரியன் வந்தனன்" என்ற நன்மொழிகளைக்கூறி ஆநந்தக் கூத்தாடக் கண்டு பரதன் மகிழ்ந்தான். அடுத்து முடிசூட்டுவிழா நிகழ இருக்கின்றது. பலரும் கூடியிருக்கின்றனர். வேதியர், மகுடமன்னர், குறுநிலமன்னர் முதலிய யாவர்க்கும் அவரவர் தகுதிக்கேற்பத் தனித்தனி இடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தங்களுக்கமைந்த இடங்களில் அவர்கள் அமர்கின்றனர். அக்காலை பரதன் மகிழ்ச்சி மீதூரச் சபாமண்டபத்துட்புக்குச் செய்த அருஞ்செயலைக் கம்பநாட்டாழ்வார் அழகுபெற வருணிக்கின்றர். வந்த பாதன், அங்குச்

சிறப்புடன்வீற்றிருந்த வசிட்டாதி வேதியரைத் தொழுதான்; பின்னர் அவர்களையடுத்து அமர்ந்திருந்த வேந்தரைத் தொழுதான்; பின்னர் அங்கே சிறுபணிகளாற்றிநின்ற தாதியரைத்தொழுது பிறகு தன்னையே தான் வணங்கினான் என்றார். இதன்கருத் தின்னதென்று ஆராய்வோம். உயர்வுபற்றி முனிவரையும், ஒப்புமைபற்றி வேந்தரையும் வணங்கிய பரதாழ்வான் ஏவலியற்றும் பாவையைப் பணிந்ததேன் என்றவினா எழுதல் இயல்பே. ஆயினும் இச்செயற்குக் காரணமில்லாமற்போகவில்லை. முடிதுறந்து காடுபடர்ந்த நாள் முதலாக இராமனையே நினைந்து பிறிதொன்றையும் நினையாமல், எந்தப்பொருளும் தனக்கு ஓர் தெய்வமென விளங்கும் பட்டாபிராமனாகவே தோற்ற, ஓர் கட்டழகிமீது காதல்கொண்ட ஓரிளைஞன் அவளையேநினைந்து வருந்துங்கால், அவன்முன்காணும் கோடும், குளமும், குளத்தருகேநின்ற குன்றுகளும், காடும் செடியும் அப்பெண்ணாகவே காண்பதுபோல், அங்கேகாணப்பட்ட சரம், அசரம் ஆன எல்லாவற்றையும், இன்னது இதுவென்ற பாகுபாடின்றிப் பிரமத்தினிடமே லயித்த சுகமுனிவனைப் போன்றிருந்த பரதன் அங்கிருந்த வியக்திகளைப் பிரித்தறியாமல், அவற்றைஇராமனாகவே கண்டு நின்றநிலை வியப்பாகாது.

மேலேகூறியனகொண்டு உடன்பிறந்தார் நேயத்திற்கே மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக ஒளிரும் பரதாழ்வானுடைய பலபண்புகளும் நன்குதெளியப்படும். தன்காவியத்திற் கிழுக்குரைத்த தன் அண்ணியாரின்மேலெழுந்த அடங்காவெகுளியைத் தன் அண்ணன் மீது செலுத்தி அவனைக் கொல்லக்கருதி வாளொடும்சென்ற அதிவீரராமனை நோக்கி, அவன் அண்ணியார் கூறியதாக வழங்கும் ஓர் அரியசெய்யுள் பரதன்பெருமையைப் பாங்குற எடுத்துக்காட்டுவதாகலின் அதனைக்கூறி இக்கட்டுரையை முடிப்பாம்.

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரிற் பார்த்தனையும் பாராதே—துஞ்சா
விரதமே பூண்டிருந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்.

# உள்ளமும் கல்வியும்.

[R. C. S. ஐயர் அவர்கள், மதுரை.]

உலகில் உயர்ந்தோர்கள் தங்கள் தொழிலையொட்டிய அறிவு முழுவதையும் அடைய விரும்புகின்றனர். ஆகவே நம்நாட்டு ஆசிரியர்கள் கற்பிக்குமுறைகளை நன்கறியவிரும்புவது வியப்பன்று. கல்வியென்பது மனப்பழக்கம் என்பர். ஆதலால் மனத்தின்றன்மையை ஆசிரியர்கள் அறிவது அமைந்த செயலாம். உள்ளத்தின்றன்மையைக் கல்விமுறைக்கிணங்க ஆராய்வதே இவ்வுரையின் நோக்கமாகும்.

மனமென்பது யாது? அஃது எவ்வாறு கற்கின்றது? இவ்வினாக்களுக்கு விடைபெறுவதே நம்நோக்கம் என்றும். நன்று. மனத்தை ஐம்பொறிகளால் அளந்தறியவொண்ணாது. மனத்தை மனத்தால் உய்த்துணரல்வேண்டும். உய்த்துணர இயலாதவர்கள் ஆன்றோர்மொழிகளைக் கேட்டுத் தெளிதல்வேண்டும்.

நம்நாட்டுப் பெரியோர்கள் மனமானது அணுவென்றும் எப்பொழுதும் சலிப்பதென்றும், விரைவான போக்கையுடையதென்றும் கூறுவர். மேனாட்டு அறிஞர்கள் இவற்றை யொப்புக்கொள்வதுடன் புதியகருவிகள் பலகொண்டு மனதை ஆராய்ந்து அறிவை வளர்த்திருக்கின்றனர். மேனாட்டுமுறைப்படி மனத்தின்றன்மையை விரிப்பதே ஈண்டுக்கொள்ளப்படும்.

விழிப்பிலும் கனவிலும் மனமானது வேலைசெய்துகொண்டிருக்கிறது. நினைப்பென்னும் அவ் வேலையானது அலைகளுடன்கூடிய ஆற்றோட்டத்தை ஒத்திருக்கின்றது. அறிவு, உணர்ச்சி, துணிபு ஆகிய அலைகள் எழுந்து விழுகின்றன. அவ்வறிவு, அவ்வுணர்ச்சி,

அத்துணிபு ஆகியவற்றின் கலப்பால் ஏற்படுவதே நினைப்பெனப் படும்.

அம்மூன்றும் ஒன்றுகூடியகாலத்தும் ஒன்று மேம்பட்டும் மற்றவை தாழ்ந்துமே நிற்கும். அறிவு மேம்படும்பொழுது உணர்ச்சியும் துணிவும் தாழும். மற்றவற்றிற்கும் அவ்வாறேகொள்க. நினைப்பின் நடுவில் அறிவு நின்றால் அதன்விளிம்பில் மற்றஇரண்டும் தாழ்ந்துகிடக்கும். நடுவிலுள்ள பொருளைக்கொண்டே அறிவுநிலை, உணர்ச்சிநிலை, துணிவுநிலை என மனத்தின் நிலைகளுக்குப் பெயர் ஏற்படுகின்றன.

மனம் வேலைசெய்யும்பொழுது இந்நிலைகள் அடிக்கடி மாறுகின்றன. நான் இதனை எழுதும்போது மணமொன்று வீசுகின்றது. அது மல்லிகைமணமென்று அறிகிறேன். சற்று இன்பஉணர்ச்சியில் ஆழ்கிறேன். முடிவில் சிலபூக்கள் கொய்யத் துணிகின்றேன். இவ்வாறே மனநிலைகள் எல்லாம் உண்டாகின்றன.

அறிவுநிலை சிறந்ததா? உணர்ச்சிநிலை சிறந்ததா? துணிவுநிலை சிறந்ததா?

உன்னை அறி, உலகை அறி; என்று அறிவைப் பெருமைப் படுத்துவோரும், பேரின்பத்தில் மூழ்கு; என்று உணர்ச்சியை உயர்த்துவோரும், "தீதொழிய நன்மைசெயல்" என்று துணிவாலேற்படும் செயலைச் சிறப்பிப்போருமாக முத்திறத்தினர்உளர். இக்காலத்திலோ உணர்ச்சியை யொழுங்குபடுத்தி அறிவைவளர்த்து நற்செயல்கள்மூலமாகச் சடப்பொருளை வெல்வதே வாழ்க்கைப் பயனெனக் கருதப்படுகின்றது. கற்பதெல்லாம் ஒழுக்கம் செம்மைப் படுவதற்கென்பதை ஆசிரியர்கள் ஒருபொழுதும் மறக்கலாகாது. முயற்சியால் வளர்கின்றோம்; அயர்ச்சியால் சுருங்குகின்றோம். பிறவியாகிய கடலை நீந்துவதற்கே உணர்ச்சிப்பொறிகளும் செயற்கைப் பொறிகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. பூமி கர்மத்தின்பொருட்டானதென்று கேள்விப்பட்டதில்லையா? அன்றியும் மனத்தின்

வேலை மூளையின்வேலையைச் சார்ந்திருக்கின்றது. உணர்ச்சிப் பொறிகள்வாயிலாகச் செல்லும் நரம்போட்டங்கள் தசைநார்களைத் தூண்டத் திரும்புகின்றன. மூளை செயலின்பொருட்டு அமைந் திருக்கின்றது. மனமும் செயலுக்காக ஏற்பட்டதென்று ஏன் கூற லாகாது? எத்தகைய நினைப்பும் முடிவில் செயலாகவே மாறும்.

ஆசிரியர்களே! உங்கள் மாணவர்களுடைய உடலும் உள்ள மும் ஒழுக்கத்திற்காக உண்டாயினவென்பதை நன்குமதியுங்கள். கல்வியென்பது ஒழுக்கத்திற்காகப் பழக்குவதேயாம். செய்யத் தகாதவற்றைத் தவிர்த்துச் செய்யவேண்டியவற்றை விடாது உரிய காலத்தில் சரிவரச்செய்வதே ஒழுக்கமெனப்படும். இதில் பழகு வதே மாணவர்களுடைய உரிமையும் கடமையுமாம்.

கற்றவன் வாழ்க்கைக்குரிய எச்செயல்களையும் நன்றாய்ச்செய்து முடிக்கிறான்; கல்லாதவன் சிறுசெயலையும் செய்யமாட்டாது திகைக் கிறான். உலகவாழ்க்கையில் ஒழுங்கான செயல்களைச் செய்து கொண்டு வாழ்பவனே கல்விமான். எத்துறையில் ஒருவனுக்கு ஒழுக்கமாவது செயலாவது குன்றுகின்றதோ அத்துறையில் அவ னைக் கல்லாதவன் என்றே கூறல்வேண்டும். செயலின்றிக் கல்வி யில்லை; செயலின்றி அறிவில்லை. கேட்ட பாடங்களைத் திரும்பக் கூறல்வேண்டும், அல்லது வேறுவழியில் பயன்படுத்தல் வேண்டும். இல்லாவிடில் அப்பாடங்கள் மனதில் நில்லா. இக்காலத்தில் மாண வர்கள் குறிப்பெழுதுவதும், சித்திரம்வரைவதும், தேசப்படங்கள் தீட்டுவதும், அளவெடுப்பதும், அகராதிபார்ப்பதும், உரைகள் எழுதுவதும், தொழிற்சாலைகளில் சோதனைகள் செய்வதுமாக நல்ல முறைகளில் கற்கின்றனர். பொருளைத்தெளியாமலே பேசிவிடலாம். பிறர்மொழிகளை ஒப்பித்துத் தன்னறியாமையை மறைத்துவிட லாம். ஒன்றைச் செய்வதென்றால் சரியாகச்செய்தல் வேண்டும். பிழைபடச்செய்து மறைப்பது முடியாது. கைத்தொழிற்சாலைப்

பயிற்சிகளால் (Manual training exercises) மாணவர்கள் வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு, தீவினைகளை யஞ்சுபவர்களாயுந் தன்னடக்கமுடையவர்களாயும் நல்லவற்றில் மனமகிழ்ச்சியுடன் காலங்கழிப்பார்கள். மேன்மேலும் இப்பயிற்சி பெருகுவதாக.

செயலின்றி அறிவில்லை; வெளியீடின்றிப் பதிவில்லை என்றும். மாணவர்கள் ஒன்றைச் செய்துமுடித்தவுடன் ஆசிரியரின் நன்மதிப்பைப்பெற விரும்புகின்றனர். இது மானிட இயற்கை. பாட்டுக்குக் கைதட்டித் தலையாட்டினால் பாடகர் மேலும் இனிமையாகப் பாடுகின்றனர். ஆகவே மாணவர்கள் ஒன்றை நன்றாய்ச்செய்தால் அவர்களுக்கு நற்குறிகள் அளித்தல் வேண்டும். அவ்வாறு அளித்தால் மேன்மேலும் முயன்று படிப்பார்கள்.

உலகிலுள்ள எல்லாப்பொருள்களும் மனிதனைச் செயலுக்குத் தூண்டுகின்றன. எச்செயலைச் செய்வதென்று துணிய மனதும் செய்கையிற் பழகக் கல்வியும் அமைந்திருக்கின்றன. வேலைக்குத் தகுந்த செயல்நடத்தவே வீட்டிலும் பள்ளிக்கூடங்களிலும் தொழிற்சாலைகளிலும் கற்கின்றோம்.

இயற்கையில் எல்லாவுயிர்களும் முயற்சியுடன் கூடியிருக்கின்றன. செடிகொடிகளின் வேர்கள் பூமியிழுப்பதால் கீழ்நோக்கிச் செல்கின்றன. வேட்கையால் நீர்நிலையைநோக்கிச் செல்கின்றன. வெம்மைக்கு அஞ்சி ஒளியினின்றும் ஒளிக்கின்றன. புழுக்கள் ஒளியைநோக்கி நெளிகின்றன. பளபளப்பான வெளிச்சம் உயிரினங்களின் கண்ணில்வீழ்ந்தால் கருவிழிசுருங்குகின்றது. உள்ளங்காலில் இறகால் தடவினால் திடீரெனக் கால் இழுபடுகிறது. குளவிகள் கிளைப்புழுவைக் கொட்டி மயங்கச்செய்து அதன்மூதுகில் முட்டையிட்டுக் களிமண்ணால் மூடிவிடுகின்றன. ஆகவே முயல்வது எல்லாவுயிர்களுக்கும் இயல்பே. அறிவு பெருகப்பெருக இயற்கை முயற்சி அறிவால் மாற்றப்படுகிறது.

இயற்கைமுயற்சியை ஒட்டியோ வெட்டியோ செயற்கைமுயற்சி ஏற்படுகிறது. ஒருவர் நாயொன்று வளர்த்தார். ஒவ்வொருநாளும் அதற்குச் சோறிடுவதற்குமுன் சிறிதுநேரம் மணியடித்துப் பின் சோறிட்டுவந்தார். அப்பழக்கத்தால் மணியோசை கேட்டவுடன் அந்நாய்க்கு உமிழ்நீர் ஊறிவிடும். சோற்றைக்கண்டவுடன் வாயில் நீரூறுவது இயற்கை. மணியோசையால் பழக்கியது இயற்கையை யொட்டிய செயற்கை. ஒரூரில் ஒரு சிறுவன் இருந்தான். தனக்கு வேண்டியபொருள் யாதேனும் பிறர்கையிலிருந்தால் அதனை வெடுக்கெனப் பிடுங்கிக்கொள்வான். நல்லாசிரியரொருவர் அவனிடம் வந்தார். தன்கையிலுள்ள கிலுகிலுப்பையை அவனுக்குக் காட்டினார். அதனை அவன் பிடுங்கிக்கொண்டான். உடனே செவிட்டில் பளீரென்று அறைந்தார். ஆட்டக்கருவியைக் கீழே வீசியெறிந்துவிட்டு அழவாரம்பித்தான். "இனி ஒன்றையும் பிறர்கையிலிருந்து பிடுங்காதே; மாமா! தயவுசெய்துதாருங்கள் என்று கேள்; இதோபார் கற்கண்டு! நான்சொன்னபடி கேட்டு வாங்கிக்கொள்" என்றார். சிறுவனும் அவ்வாறேசெய்து மகிழ்ச்சியடைந்தான். இஃது ஒன்றை வெட்டியுண்டாக்கும் செயற்கைமுயற்சி.

இயற்கைக்குணத்தை ஒட்டியோ வெட்டியோ தான் செயற்கைக்குணம் ஏற்படும். இயற்கையையறிந்து நற்பழக்கம் உண்டாக்குவதே ஆசிரியரின் கடமையாகும். இனி சில இயற்கைக்குணங்களை ஆராய்வாம்.

முதன்முதலில் அச்சம்: இருளைக்கண்டும் புதியபொருளைக் கண்டும் அஞ்சுவது யாவர்க்கும் இயல்பு. அஞ்சாதநெஞ்சம் வீரர்களுக்கு வேண்டப்படும். "அஞ்சு வதஞ்சி லறிவார் தொழில்" தண்டனைக்கு அஞ்சி மாணவர்கள் பாடங்களைப் புறக்கணியாமல் போற்றுவார்கள் என்ற விஷயத்தை யாவரும் நன்கறிவார்கள்.

அடுத்தபடி அன்பு: நாம் எவரை நேசிக்கின்றோமோ அவரை மகிழ்விக்க விரும்புகின்றோம். ஆதலால் மாணவர்களின் நேசத்

தைப்பெற்றுவிடின் இவர்களுடைய உழைப்பை எளிதில் பெற லாம்.

மூன்றாவதாக பொருள்களை நன்கறிய வேண்டுமென்ற அவா: புதியபொருள்கள், பளபளப்பான பொருள்கள், ஒலிக்கின்றபொருள் கள், அசைகின்றபொருள்கள் ஆகியவைகள் எக்காலத்திலும் சிறுவர்களுடைய கவனத்தை இழுக்கின்றன. படக்காக்ஷி (Cinema) மிருகக்காட்சி (Circus) நாடகம், கூத்து, பாட்டுக் கச்சேரி, ஜாலவேடிக்கை, தேக்கச்சேரி, தேர், திருவிழா, இவற்றிற்கு ஒருநாளும் கூட்டம் குறையாது. இவ்வவாவினின்றுந் சாத்திரங்கள் எழுதப்பட்டன. இவ்வவா சிறுவர்களிடத்தில் மிகுந் திருக்கும். வயதிலுகவர்கக் குறையும். முப்பது வயதுக்குமேல் பெரும்பாலும் தன்றொழிலையன்றிப் பிறவற்றிற் பற்று ஏற்படுவது அருமை. சிறுவயதில் பொருட்பாடங்களும் கைத்தொழில்களும் கற்பிக்கப்படல் வேண்டும். மதினாறு வயதுக்குமேல் காரணகாரிய ஆராய்ச்சி ஏற்படும். அப்பொழுது சாத்திரப்பயிற்சி உண்டாக்கு தல் வேண்டும். இளமையிற்கல் என்றது இவ்வுண்மையைப் பின் பற்றியன்றோ?

பிறரைப்பார்த்துச் செய்தல் என்ற குணமும் பொதுவானதே. 'தார்தே' என்ற பரங்கிஆசிரியர் இதனை விரித்துரைத்திருக்கின் றனர். அடுத்தவீட்டுக்காரர்களும் எதிர்வீட்டுக்காரர்களும் எதைச் செய்கின்றனரோ, அதனையே நாமும் செய்ய விரும்புகின்றோம். நம்மை அறியாமலே செய்கின்றோம். பாஷை, கலை, நிலையங்கள் சாத்திரங்கள் யாவும் இக்குணத்தால் வளர்கின்றன. மன்னன் கொன்னிப் பேசினல் மன்னுயிர்களும் கொன்னிப் பேசுவார்கள். பெரியவர்கள் காட்டுடை கட்டினால் யாவரும் காட்டுடையே கட்டு வார்கள். பாட்டன்மார்கள் பின்பற்றிய கொள்கைகளையே பேரன் மார்களும் பின்பற்றுவார்கள். இதனை இனியும் விரிக்கவேண்டிய தில்லை.

பின்பற்றுவது என்பது ஒன்றுக்குப் பத்தாய்ச்செய்தல் என்ற போட்டிக்குணமாக மாறும். சேஷன் பத்துரூபாய் தானஞ்செய் தால் குப்பன் நூறுரூபாய் தானஞ்செய்கிறான். அவனுக்கு நாம் இளைப் பதாவென்ற எண்ணம் நம்மைத் தூண்டி முயலச்செய்கிறது. அக் கம்பக்கத்தார் அடைகின்ற பேற்றை நாமும் அடைய விரும்புகின் றோம். பலர்கூடிக் கற்பதால் மாணவர்கள் போட்டியுடன் நன்கு கற்கின்றனர். ஆசான்மார்கள் நல்ல வழிகாட்டிகளாயிருத்தல் வேண் டும். குருமார்களையும் தலைமாணாக்கர்களையும் பின்பற்றியே பள்ளிக் கூடம் முழுதும் நடக்கின்றது. தலையாடாமல் வாலாடாது. போட்டி யின்றிச் செம்மையான வாழ்க்கை ஏற்படாது. பிறருடன் போட்டி போடாவிடினும் தன்னுடனாவது போட்டி வேண்டும். சென்ற வருஷம் இம்மட்டுமறிந்து இந்நிலையினின்றேன்; இவ்வருஷம் அறி விலும் நிலையிலும் உயர்வேன்; என்று தன்னைத்தானே கடந்து உயர் தல் வேண்டும். ஆயிரங்கூறினும் பிறருடன்போட்டி யென்பது அழியாது. பள்ளிக்கூடங்களில், நற்குறிகள், பரிசுகள் முதலியவற் றால் இப்போட்டியை ஒழுங்குபடுத்திவிடலாம். பந்தயவோட்டங்க ளாலும் ஆட்டங்களாலும் இப் போட்டியுணர்ச்சி திருத்தமடைகின் றது.

முன்னேற விரும்புதல், தன்னைமதித்தல், தடைகளைக் கடத்தல் ஆகிய குணங்களும் நம்மைச் செயலுக்குத் தூண்டுகின்றன. இலக் கணப்பாடத்தைக்கண்டு அஞ்சுவது வெட்கத்தை விளைவிப்பதாம் என்று மாணவர்கள் கருதினால் அதனைப் படியாமல் விடுவரா? உரோசத்துடன் ஒன்றைச் செய்வதாலன்றோ குணம் வளர்கின்றது?

அடுத்தபடியாக உடைமை: இரண்டாவது வயதிலேயே எனது எனக்கு என்ற சொற்கள் கற்கப்படுகின்றன. இரட்டைக்குழந்தை களுக்குத் தனித்தனிப் பொம்மை வாங்கித்தராவிடில் வீடு அமர்க் களந்தான். ஆண்டிகளுக்கும் தண்டுகமண்டலம் வேண்டியிருக் கின்றது.

சிறுவர்களைத் தமதுடைமைகளை ஒழுங்காகச் சேமித்துவைக்கப் பழக்குதல்வேண்டும். பொருள்களை யீட்டுதலென்பது சிறந்ததோர் பழக்கமாம். தொடர்ச்சியாகவுள்ளவற்றிற் சில குறைந்தால் அவற்றைத் தேடிச்சேர்க்க எவ்வளவு முயலுகின்றோம்? இதனாலன்றோ நிகண்டு அகராதி அபிதானகோசம் முதலிய நூல்கள் எழுதப்படுகின்றன. ஆயிரஞ்சேர்ப்பேன், இலட்சஞ்சேர்ப்பேன் என்ற துணிபெல்லாம் இவ்வுணர்ச்சியாற்றான். நூல்கள்சேர்த்து நிலைக்கச் செய்வது சிறந்த செயலாகும். ஒழுங்கு, முறை, முதலியன கற்கப்படுகின்றன; அறிவும் வளர்கின்றது. பொருளீட்டலென்பது இய[illegible]கப்பொருட்பாடங்கட்கு இன்றியமையாததாம்.

---

ஸ்ரீ:

# மதிப்புரை.

சைவத்திருநெறியும் தெய்வத்தமிழ்மொழியும் தழைத்தோங்கிவளரத் திருவாவடுதுறை யாதீனகர்த்தர்கள் இஞ்ஞான்று செய்துவரும் அறப்பணிகள் மிகப்பல. அவற்றுள் தலைசிறந்தது, பல அருந்தமிழ்ச் சைவசமயநூல்களை அவர்கள் அச்சிட்டு உதவி வருதலாம். அம்முறையில் இதுகாறும் ஒரு நாற்பத்துமூன்று புத்தகங்கள் வெளிப்போந்து நாட்டுக்கு நற்பயன்விளைத்துவருகின்றன.

அவற்றுள் ஒருசில அரும்பெறற் சிறுநூல்கள் இதுபொழுது இச்செந்தமிழ் மதிப்புரைக்கு அனுப்பப்பெற்றுள. திருவாவடுதுறையாதின மஹாஸந்நிதானத்தின் அருட்பிரஸாதங்களான அவற்றின் அருமைபெருமைகள் அளவிடும்தரம் என்னே?

அப்புத்தகங்களிற் சிலமூர்த்தியவெளியீடுகள் முன்பு இருபதாவதுபட்டத்தில் எழுந்தருளியிருந்த குருமஹாஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாணதேசிகபரமாசாரியசுவாமிகளின் கட்டளையாலும், பிந்தியவெளியீடுகள்சில, இப்பொழுது இருபத்தொன்றுவது பட்டத்தில் எழுந்தருளி விளங்கும் குருமஹாஸந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிகபரமாசாரியசுவாமிகளின் கட்டளையாலும் அழகாக அச்சியற்றி அளிக்கப்பெற்றுள்ளன. நன்றும் நனியுதவுமென்பது முதுமொழியன்றோ?

இப்புத்தகங்களெல்லாம் உருவாற்சிறியனவேனும் பொருளாற் பெரியனவென்பது சொல்லாமையே விளக்கும். இவற்றை சமயநூலறிவும் தமிழ்மொழிப்பயிற்சியும் சால்புறக்கொண்ட அவ்வாதீன வித்துவான் திரு, த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் நன்குபரிசோதித்துச் செவ்வனம் பதிப்பித்துள்ளார்கள். பலபுத்தகங்களுக்கும் அவர்கள் நல்ல முகவுரை எழுதியிருக்கிறார்கள். சிலவற்றிற்குச் சிறந்த குறிப்புரையும்வரைந்து சேர்த்திருக்கிறார்கள். மற்றும் முக்கியமான சிலவற்றுக்கு அவர்கள் மிகத்தெளிவான பதவுரையும் விசேடவுரையும் விரித்தெழுதி விளக்கியிருக்கிறார்கள். இம்முறையில் அவர்களின் சமயத்தொண்டும் தமிழ்ப்பணியுமாகிய நன்முயற்சிகள் பெரிதும் பாராட்டற்குரியன.

இனி, அப்புத்தகங்கள் வருமாறு:—

1. முத்தி பஞ்சாக்கரமாலை, ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர்மாலை:—இப்புத்தகம் துறைசையாதீனத்து 1-வது வெளியீடு. ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர் இவ்வாதீனத்தின் ஆதிகுருவாவர். அத்தேசிகமூர்த்திகளின் கீர்த்தியைப்பாடுவதாய இம் மாலை ஸ்ரீ மாதவச்சிவஞான சுவாமிகள் அருளிச்செய்த பெருமைவாய்ந்தது. பத்திச்சுவை நிரம்பிய பாடல்களான இவை, ஷை ஆதீனவித்துவான் திரு. வி. சிதம்பரராமலிங்கபிள்ளையவர்கள் எழுதின பதவுரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

2 நல்லூர் மாசிமக மகோற்சவ வைபவம்:—இது ஷை ஆதினத்தின் 3-வது வெளியீடு. சோழநாட்டுத் திருநல்லூர் என்னும் சிவக்ஷேத்திரத்தின் மூர்த்திதலம்தீர்த்த வைபவங்கள் தெளிவாகவும் சுருக்கமாகவும் இதில் வசனநடையா லெழுதப்பட்டு விளங்குகின்றன.

3. அத்துவிதவாக்கியத் தெளிவுரை:-இது, 27-வது வெளியீடு. மாதவச்சிவஞானயோகிகளாலருளப்பெற்று மாண்புமிக்க இவ்வுரைநடைநூல் சித்தாந்தசைவச்செல்வர்கட்குப் பெரும்பேறளிக்க வல்லது. இதனை அவ்வாதீனவித்துவான் திரு, த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் நன்குபரிசோதித்துத் தமது அரிய முன்னுரையோ[illegible]ஏந்தியபதிப்புக்களினும் திருத்தமுறப் பதிப்பித்திருப்பது குறிப்[illegible]டத்தக்கது.

4. சிவஞானபோதம்:—இது 28-வது வெளியீடு. ஸ்ரீமெய்கண்டதேவ நாயனாருளிய சிவஞானபோதம் உரையுடனும், வடமொழிமூலம் தமிழுரையுடனும் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. சைவசமயத்தின் சிறந்த ஞானநூலான இது மிகச் செவ்விய முறையிற் பதிக்கப்பட்டிருப்பது பாராட்டத்தக்கது.

5. முத்தி பஞ்சாக்கரமாலை, ஸ்ரீநமச்சிவாயமூர்த்திதாராட்டு, திருவாவடுதுறைத் தேசிக சோபானம்:—இது 32-வது வெளியீடு. இப்புத்தகத்தின் முகவுரை, துறைசையாதீனத்தின் பெருமையையும் அவ்வாதீன கர்த்தர்கள் செய்துவரும் தருமபரிபாலனங்களையும் நன்கு விவரிக்கின்றது.

6. ஸ்ரீமாதவச்சிவஞானயோகிகள் பிரபந்தங்கள்:—இது 33-வது வெளியீடு. இதில், கச்சி ஆனந்தருத்திரேசர் பதிகம்; திருத்தொண்டர் திருநாமக் கோவை; திருவேகம்பர் ஆனந்தக்களிப்பு; சுலோகபஞ்சகமொழிபெயர்ப்பு; பஞ்சாக்கரதேசிகர் மாலை; என்னும் ஐந்து சிறுபிரபந்தங்கள் அடங்கியுள்ளன. பதிப்பாசிரியர் திரு, த. ச. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் நூதனமாக எழுதின குறிப்புரையும் இதிற்சேர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

7. பாரததாற்பரியசங்கிரகம் உரையுடன்:— இது 37-வது வெளியீடு. பாரத இதிகாசத்தில் சிவபாரத்துவம் விளக்கக்காட்டும் இது, ஸ்ரீமத் அப்பையதிக்ஷிதரால் இயற்றப்பட்ட வடமொழி மூலத்தின் தமிழ்மொழிபெயர்ப்பு. மஹாவித்துவான் ஸ்ரீசபாபதிநாவலரவர்கள் இந்நூலின் ஆசிரியாராவர். மூலசுலோகங்கள் இப்பதிப்பினிறுதியிற் சேர்க்கப்பட்டுள்ளன.

8. உலகுடைநாயனுர் கழிநெடிலடியாசிரியவிருத்தம், பெரியபிள்ளை திருவெண்பா, ஆனந்தக்களிப்பு முதலியன:—இது 38-வது வெளியீடு. இதிற் பதிப்பாசிரியர் குறிப்புரை மிக்க பயன்தருவது.

9. விநாயகரகவல்:— இது 43-வது வெளியீடு. இது ஔவையார் அருளிச்செய்ததென வழக்கும். பதிப்பாசிரியர் எழுதிய பதவுரையும் விசேடவுரையும், சைவசித்தாந்தக்கொள்கைகளைத் தக்கமேற்கோளுடன் நன்குவிளக்குவன.

இப்புத்தகங்களின் விலைமுதலிய விவரங்கள் குறிப்பிடப் பெறவில்லை. வேண்டுவோர் ஷை திருவாவடுதுறையாதீனத்திற்றெரிந்து கொள்ளலாம்.

---

## II

1. 'பாடுவார்' முத்தப்பசெட்டியார் வரலாறு:— [ எழுதியவர், 'இளவரசன் நா. நடராஜன்' விலை ரூ 1—4—0. 'மன்னவன் வெளியீடு' கிழச்சிவப்பட்டி; ராமநாதபுரம் மாவட்டம்.]

தனவணிகர் குலத்துக் கவிமணியாய் விளங்கின முத்தப்பசெட்டியார், வாழவும்கெடவும் பாடவல்ல நாவன்மைபடைத்த வரகவியென்று தெரிகின்றது. சமயோசிதமாக அவர் இயற்றிய தனிப்பாடல்களை அரிதின்முயன்றுதேடி, அவர் வரலாற்றினைக் கோவைப்படத்தொகுத்து, இனிமையும் எளிமையும் வாய்ந்த தமிழ் நடையில் இப்புத்தகத்தை ஆசிரியர் எழுதியுதவியுள்ளார். தமிழன்பர் இதனைப் படித்துப் பயன்பெறுவதோடு, சிறப்பாகச் செட்டிமார்நாட்டார் இவரிடம் நன்றிபாராட்டவும் கடப்பாடுடையர்.

2. அபிமன்போர்:—[ஆசிரியர், பண்டித இராமசுப்பிரமணிய நாவலராவர்கள். விலை அணா 6. செந்தமிழ்நிலையம், தக்கலை, தென்னிந்தியா.]

நிர்தமிழ்ச் செய்யுள்நடையானியன்ற இது, பாரதப்பேரிதிகாசத்தின் சிறிய வழிநூலாகும் தாத்தது; அபிமன் போர்ச் செயல்களை மெய்ப்பாடுபொருந்த நன்கு விரித்துரைக்கின்றது; அற்றுநாற்பத்தெட்டு நேரிசைவெண்பாக்கள் கொண்டது; இன்றியமையாத குறிப்புரையுடனும் சேர்ந்தது. இதில் ஆசிரியரின் செந்தமிழ்ப்புலமையும் திருந்தியசெய்யுளியற்றும்திறமையும் நன்கு வெளிப்படுகின்றன.

[illegible] உவமானவிளக்கம்:— [ஆசிரியர், பண்டித இராமசுப்பிர[illegible] நாவலராவர்கள். விலை அணா 4. செந்தமிழ்நிலையம், தக்கலை, [illegible]ணிந்தியா.]

இச்சிறுநூல் நாற்பத்தாறு இனிய நேரிசைவெண்பாவானது; பழையமரபு பிறழாமற் காவியங்கற்பார்க்கு அறியவேண்டும் உவமைகள் இன்னவென நன்குவிளக்குவது. அருஞ்சொற்பொருளும் உடன்சேர்ந்தது.

---

4. தமிழ்மொழிமாலை:—[ ஆசிரியர், புலவர்பொன்னம்பலம்; திருச்சத்தி. அரங்கேற்றுப்பதிப்பு.]

இஃது அந்தாதித்தொடையமைந்த முப்பதுவெண்பாக்களால் முடிந்தது. அருந்தமிழ்ப்புலவர் பலரின் பெருந்தகை நன்மதிப்புப் பெற்றது. செந்தமிழ்த் தெய்வப்பெருமையில் ஆசிரியர்கொண்ட பேரார்வமும் திருந்தியசெய்யுளியற்றுந்திறனும் போற்றத்தகுவன.

---

# மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

## I. சங்கப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஞானாமிர்த மூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 2. | சைவமஞ்சரி ... ... ... ... | 1 | 8 | 0 |
| 4. | வைத்தியசாரசங்கிரகம் ... ... ... | 5 | 0 | 0 |
| 5. | பன்னூற்றிரட்டு ... ... ... | 3 | 0 | 0 |
| 8. | தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம் ... ... | 5 | 0 | 0 |
| 10. | தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை) ... ... | 1 | 12 | 0 |
| 11. | திருவருணைக்கலம்பகம் ... ... ... | 0 | 6 | 0 |
| 13. | கலைசைச்சிலேடைவெண்பா ... ... ... | 0 | 6 | 0 |
| 15. | திருவாரூர் நான்மணிமாலை ... ... ... | 0 | 4 | 0 |
| 16. | ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம் ... ... | 1 | 4 | 0 |
| 17. | பன்னூற்றிரட்டு (செலக்ஷன்) ... ... | 0 | 4 | 0 |

---

## II. செந்தமிழ்ப்பிரசுரம்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| 1. | ஐந்திணையைம்பது (உரையுடன்) ... ... | 0 | [illegible] | [illegible] |
| 2. | கனுநால் (5) இனியதுநாற்பது (உரை) ... ... | 0 | [illegible] | [illegible] |
| 4. | புலவராற்றுப்படை ... ... ... | 0 | 3 | 0 |
| 7. | திருநூற்றந்தாதி (உரையுடன்) ... ... | 0 | 6 | 0 |
| 8. | திணைமாலை நூற்றைம்பது (உரையுடன்) ... ... | 0 | [illegible] | 0 |
| 9. | அநுமானவிளக்கம் ... ... ... | 0 | 10 | 0 |
| 10. | அட்டாங்கயோகக்குறள் ... ... ... | 0 | 2 | 0 |
| 12. | பன்னிருபாட்டியல் ... ... ... | 0 | 12 | 0 |
| 13. | நான்மணிக்கடிகை (பழைய உரை) ... ... | 0 | 4 | 0 |
| 14. | மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள் ... ... | 0 | 3 | 0 |
| 16. | திருவாரூருலா ... ... ... ... | 0 | 8 | 0 |
| 17. | சகசந்தர்சனதீபிகை ... ... ... | 0 | 12 | 0 |
| 18. | இயற்கைப்பொருட்பாடம் ... ... ... | 0 | 4 | 0 |
| 19. | தேவையுலா ... ... ... ... | 0 | 3 | 0 |
| 21. | சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்) ... ... | 0 | 8 | 0 |
| 22. | திருக்கலம்பகமூலமும் உரையும் ... ... | 1 | 0 | 0 |
| 23. | விக்கிரமசோழனுலா ... ... ... | 0 | 8 | 0 |
| 24. | குருமொழிவினாவிடை ... ... ... | 0 | 1 | 0 |
| 25. | கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை ... ... | 0 | 2 | 0 |
| 26. | திருத்தணிகைத்திருவிருத்தம் ... ... | 0 | 1 | 0 |
| 27. | மதுரைத்திருப்பணிமாலை ... ... ... | 0 | 8 | 0 |
| 30. | ஞானாமிர்தக்கட்டளை ... ... ... | 0 | 3 | 0 |
| 32. | மநீஷாபஞ்சகம் ... ... ... | 0 | 8 | 0 |
| 36. | உவமானசங்கிரகம் ... ... ... | 0 | 1 | 0 |
| 37. | மாறனலங்காரம் மூலமும் உரையும் ... ... | 4 | 8 | 0 |
| 38. | திருப்புல்லாணிமாலை ... ... ... | 0 | 2 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 40. | திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ... | 0 | 8 | 0 |
| 41. | பொருட்டொகைநிகண்டு ... ... ... | 0 | 6 | 0 |
| 42. | அகராதிநிகண்டு ... ... ... | 0 | 12 | 0 |
| 43. | மேகவிடுதூது ... ... ... | 0 | 2 | 0 |
| 44. | திருக்குற்றாலமாலை ... ... ... | 0 | 2 | 0 |
| 45. | தண்டலையார்சதகம் ... ... ... | 0 | 4 | 0 |
| 46. | இராமோதந்தம் ... ... ... | 0 | 3 | 0 |
| 47. | பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ... | 1 | 0 | 0 |
| 48. | சேதுநாடும் தமிழும் ... ... ... | 0 | 6 | 0 |
| 52. | கூடற்புராணம் ... ... ... | 0 | 10 | 0 |
| 53. | திருவள்ளுவர் (. ங்கிலம்) ... ... ... | 0 | 6 | 0 |
| 54. | அரும்பொருள்விளக்கநிகண்டு... ... ... | 1 | 4 | 0 |
| 55. | மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ... | 0 | 12 | 0 |
| 56. | பாப்பாவினம் ... ... ... | 0 | 10 | 0 |
| 57. | ...ரைமும்மணிக்கோவை ... ... ... | 0 | 5 | 0 |
| 58. | ...ப் பிள்ளைத்தமிழ் ... ... ... | 0 | 3 | 0 |
| 59. | ...பர்கோயில் உலா ... ... ... | 0 | 6 | 0 |
| | ...கராயினர்கோயில் அந்தாதி ... ... | 0 | 6 | 0 |
| | ...லைசைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| | பெருந்தொகை ... ... ... | 5 | 0 | 0 |
| | சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ... | 0 | 5 | 0 |
| 64 | ...மலைக்கோவை ... ... ... | 0 | 12 | 0 |
| 65 | மத்யமவியாயோகம் ... ... ... | 0 | 2 | 0 |
| 67. | அமிர்தரஞ்ஜனி ... ... ... | 0 | 2 | 0 |
| 69. | பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ... | 0 | 8 | 0 |
| 70. | திருச்சிறுபுலியூருலா ... ... ... | 0 | 12 | 0 |
| 71. | தனித்தலைவர் நினைவுமலர் ... ... ... | 0 | 10 | 0 |

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்"செந்தமிழ்"ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 47 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும். S. சிவஸ்வாமி, மானேஜர்.